முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 14-12-50 வெள்ளி | ஒலி 37



பொழுதுபோக்கு

'டெமாஸ்தனிஸ்'

ஐந்து கோடி ஆதித் திராவிட மக்களின் ஈடு இணையற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் காலமாகி விட்டார்.

வர்ணாசிரமத்தின் கோரப் பிடியில் சிக்கிச் சீரழிந்த மூன்று லட்சம் மக்களுக்கு ஆத்மீக, சமுதாய விடுதலை வாங்கித் தருவதற்காக, "புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!" என்று ஒலித்த அந்தக் குரலை இனி நாம் என்றுமே கேட்க முடியாது!

இந்து மதத்தின் இழிகுலத்திலே பிறந்து, அரசியல் உலகில் அறிவுப் பகலவன் என ஒளி வீசி, அருளரசன் புத்தனின் ஞான மார்க்கத்தில் 'தீட்சை' பெற்று, ஜனநாயகப் பண்பாடு தழைக்க தன்னை அர்ப்பணிக்கும் நிலையிலிருந்த அறிவு ஜோதி அணைந்து விட்டது!

அரசியல் உலகம் ஒரு மேதையை இழந்துவிட்டது! சட்ட உலகம் ஒரு நிபுணரை இழந்துவிட்டது! ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரல் செத்துவிட்டது! சுயமரியாதை இயக்கம் உற்றதொரு தோழரை இழந்து கண்ணீர் வடிக்கிறது!

ஆசியாவின் அரசியல் மேதைகள் சிலரில் ஒருவர் என்று பீவர்லி நிக்கலஸ் புகழ்ந்தார்! இந்திய அரசியல் சட்டத்தை சிறப்புறச் செய்து முடித்தார் என்ற காரணத்திற்காக அவர் படித்துப் பட்டம் பெற்ற கொலம்பியா சர்வ கலாசாலை 'சட்டப் பேரறிஞர்' என்ற கௌரவப் பட்டத்தை வழங்கி மரியாதை செய்தது.

இந்துவாகப் பிறந்து—இழி பிறப்பு என்ற காரணத்தால்—தாழ்த்தப்பட்டோர் குலத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால்—இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் பள்ளிப் பருவத்திலேயே ஆளாக்கப்பட்ட அம்பேத்கார், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாட்டினை நிலை நிறுத்தி, இந்து மதத்தின் பெருங் கேட்டினை மாய்க்கச் சூளுரைத்துப் புறப்பட்டபடியே வெற்றியும் கண்டு விட்டார்!

இந்து மதத்தின் இழிமகனாகப் பிறந்தார்! அதன் பித்தலாட்டங்களை எதிர்த்து சீர்திருத்த மேதையாக வாழ்ந்தார்! ஆசிய ஜோதி புத்தனின் வழி நின்று அறவொளி பரப்பும் கர்ம வீரராய் மாண்டார்!

அறிஞர் அம்பேத்காரின் வாழ்க்கை, சமுதாயக் கழனியில் முளைத்துவிட்ட களைகளைப் பிடுங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நமக்கெல்லாம் வழிகாட்டி! அவரது பிரிவால் வாடும் எண்ணற்ற தாழ்த்தப்பட்டோரின் துயரில் திராவிடமும் பங்கு பெறுகிறது. வாழ்க அம்பேத்காரின் தொண்டு!

* * *

பண்டித நேரு சமீபத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு யோசனை வெளியிட்டிருக்கிறார் கூடுமானவரையில் மந்திரி சபையில் மக்கள் சபைப் பிரதிநிதிகளை மந்திரிகளாகவும் உதவி மந்திரிகளாகவும் நியமிக்கப்பட வேண்டுமென்று! ஏனெனில் அப்பொழுதுதான் மந்திரிசபை பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்குமென்பது நேருவின் கருத்து! நல்ல அருமையான திட்டம்; நல்ல ஜனநாயக ஒழுங்குமுறை அமுலிலுள்ள பிரிட்டனிலும் கூடுமானவரை இந்த முறையேதான் நடைமுறையில் உள்ளது.

ஆனால் நமது கொல்லைப்புறப் பேர்வழி ஆச்சாரியார், உபநிஷதப் பலகணி வழியாகப் பார்த்து என்ன கீதோபதேசம் புரியப் போகிறாரோ தெரியவில்லை! விஷயம் அவரையல்லவா பாதிக்கிறது? கொல்லைப் புறக் கதவைத் திறந்துவிட்ட மேன்மை தங்கிய பிரகாசாவின் முகத்தில் இதைப் படித்தவுடன் அசடு வழிந்திருக்கும்.

இதோடு, தேர்தலில் நின்று தோற்றவர்களுக்கு கவர்னர் வேலை 'ரிசர்வ்' செய்யப்பட மாட்டாது என்பதையும் நேரு திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். ஏனெனில் 'அரசியல்—அனாதை'களுக்காகவே கவர்னர் வேலை இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் ஒரு வதந்தி உலவுகிறது.

சென்னை கவர்னர் பதவியேற்க இருக்கும் திருவாளர் ஜான் அவர்களை மட்டும் நினைத்துக்கொண்டு நான் இதை எழுதவில்லை!

* * *

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியாவின் விஞ்ஞான, தொழில் முன்னேற்றத்தை வெகுவாகப் பாராட்டி இருக்கிறார். நம்முடைய தேசீய ஏடுகள் 'மாமூல்'படி கொட்டை எழுத்தில் அதைப் பிரசுரித்துள்ளன. சூ-என்-லாய் ஒரு சாமர்த்தியமான காரியவாதி என்பதைப் பாண்டுங் மாநாடு தெளிவாக எடுத்துக் காட்டியது. நேரு ஒரு புகழ்ச்சிப் பிரியர் என்பதை சூ நன்கு அறிவார். ஆகவே பூனாவில இந்தியாவின் தொழில் வளர்ச்சியைப் பாராட்டிவிட்டு. பம்பாயில், ஐ நா. வில் கம்யூனிஸ்ட் சீனா இடம்பெற பாரதம் எடுத்துள்ள முயற்சியைப் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளார்.

புகழுரை வீசி. காரிய சாதனை பெறுவதில சூ-என்-லாய் ஒரு அரசியல நரி என்கிறார், அவருடைய வரலாறு எழுதும் ஒரு பேராசிரியர். சீனப் புரட்சியின் உயிர் மா-சே-துங் என்றால், அதன் மூளை சூ-என-லாய். ஐரோப்பாவில கல்வி மட்டுமின்றி இராஜ தந்திரமும் பயின்ற அவர், தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதில் நிபுணர். சூ-என்-லாயின் பூனா—பம்பாய் பேச்சுக்குள்ள தொடர்பு அதைத்தான் நமக்கு அறிவிக்கின்றன.

எல்லாம் ராஜதந்திரம்! தேசீயத் தோழரே—ஏமாந்து விடாதீர்!

* * *

பாகிஸ்தானில் யார் பிரதம மந்திரியானாலும் மூளைக் குழப்பம் அவர்களுடைய பொதுவான வியாதியாகிவிட்டது என்பதை பாக். பிரதமர் சுகரவர்த்தியின் சமீபத்திய பேச்சு அறிவிக்கிறது. இராணுவ ஒப்பந்தங்களை முழுமூச்சோடு எதிர்த்த அவர், பிரதமர் ஆனவுடன் தேவையற்ற சப்பைக் கட்டு அதற்குக் கட்டுகிறார். எகிப்தின் உரிமையில் பிரிட்டன் தலையிட்டிருப்பது உலகத்தின் பெரும்பான்மை மக்களின் நன்மையைக் கருதி என்கிறார் சுகரவர்த்தி! இதில் நயம் என்னவென்றால் ஐ. நா. தீர்மானத்தை ஒட்டி, பிரிட்டனும் பிரான்சும் தங்கள் படைகளை சூயஸ் பிரதேசத்திலிருந்து வாபஸ்பெற முடிவு செய்து, பிரிட்டனின் வெளி நாட்டு மந்திரி செல்வின் லாயிட் அறிக்கை வெளியிடும் நேரத்தில் சுகரவர்த்தி இப்படிப் பேசியிருக்கிறார். ஏகாதிபத்யத்தைவிட அதன் முன்னோடும் பிள்ளை தீவிரமாக இருப்பது வேடிக்கையல்லவா!

நாசர், சுகரவர்த்திக்குப் பேட்டியே அளிக்க மறுத்து விட்டார்!

சில பாக்தாத் ஒப்பந்த நாடுகளே பாகிஸ்தானின் போக்கை எகிப்து விஷயத்தில், விரும்பவில்லை.

எகிப்து விவகாரத்தில் தோல்வியை ஒப்புக்கொண்டு. ஈடன் ஓய்வுபெற்று விட்டபிறகு, செல்வின் லாயிட் படைகளை வாபஸ்பெற முடிவு செய்து விட்ட பிறகு. சுகரவர்த்தியின் இந்தப் பேச்சு அரசியல் அறிவு சூன்யத்தைத்தான் காட்டுகிறது!

○

டிஸம்பர் மாதம் சங்கீத சீசன்! மியூசிக் அக்காடமி, பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, தமிழ் இசைச் சங்கம் வழக்கம் போல் இசை விழாக்கள் நடத்தப் போகின்றன தமிழ் இசைச் சங்கத்தின் விழாவிற்குப் பொருத்தமான வகையில் தமிழ் மேதை டாக்டர் மு. வரதராசன் அவர்கள் தலைமை வகிக்கப் போகிறார். வருங் காலத்தில் தமிழ் இசை ஓங்க, ஐந்தாம படையின் தமிழ்க்கலை ஒழிப்பு வேலை தோல்வியுற. சீரிய செயல் திட்டங்களுக்கான யோசனைகளை டாக்டர் வரதராசனார் அளிப்பார் என்று தமிழ்ப் பெருங்குடி மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அரசியல்வாதிகளைவிட, மொழித் துறையில் செல்வாக்கும் சிறப்பும் பெற்று விளங்கும் மு. வ. அவர்களே இப்பணி செய்யத் தக்கவர்.

ஏனெனில், இசையில் தமிழ் மொழியை அடியோடு புறக்கணித்து விடுவது என்ற தீய நினைப்புடன். இசைத்துறையில் செல்வாக்குப் பெற்றுள்ள ஒரு கோஷ்டி கிளம்பி இருக்கிறது. இதற்கு மறைமுகமாக மத்திய அரசாங்கமும் ஆதரவு அளித்து வருகிறது. போனமாதம 'சங்கீத சம்மேளனம்' என்று ரேடியோ நிலையங்கள இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்திருந்தன. தமிழர்களுக்காகவே உள்ள சென்னை, திருச்சி ரேடியோ நிலையங்களில் இந்நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற பல சங்கீத வித்வான்களில மூன்று பேர்தான் தமிழ்ப் பாட்டுப் பாடினர்.

கே. பி. சுந்தராம்பாள்.
தண்டபாணி தேசிகர்.
சி. எஸ். ஜெயராமன்.

மற்றையோரெல்லாம் பார்ப்பனரல்லாத தமிழர் உட்பட—

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திடீர் மறைவு குறித்து
திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்,

தோழர் இரா. நெடுஞ்செழியன்

அவர்களின்

அனுதாபச் செய்தி

தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கும் நலத்திற்கும் அயராது அரும்பாடுபட்டு அரிய நன்மைகள் பல ஆற்றி வந்த மாபெரும் தலைவரும், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள முக்கியமான சில அரசியல் பேரறிஞர்களில் ஒருவரும், சிறந்த பகுத்தறிவு வாதியுமான டாக்டர் பி. ஆர், அம்பேத்கார் அவர்கள் திடீரென இயற்கை எய்திய சேதி கேட்டுத் திடுக்குற்றேன். அவரது ஈடு செய்ய முடியாத இழப்பு. ஆறாத் துக்கத்தையும் துயரத்தையும் தருகிறது. அவரைப் பிரிந்து வருந்தும் உற்றார், உறவினர் நண்பர் ஆகியோருக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சென்னை 14-12-56 வெள்ளி

பஞ்சோ பஞ்சு!

உற்பத்தியைப் பெருக்கு! உற்பத்தியைப் பெருக்கு!!—என்று ஊரெல்லாம் உபதேசம் செய்கிறார்கள்! காது ஊனமானவர்களும் கேட்கும் அளவுக்கு உரத்த குரலிலே பிரச்சார பீரங்கியை முடுக்கி விடுகிறார்கள்!

ஆனால் உற்பத்தியான பொருளை விற்பனை செய்வதற்கோ இந்த அரசு தகுந்த சந்தையினை ஏற்படுத்திக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

இதுபோன்ற கண்மூடித்தனமான போக்கு காரணமாக இப்போது திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் 13,000 பஞ்சு பேல்கள் வாங்குவதற்கு ஆளின்றி; சென்று முடங்குவதற்கு இடமின்றி தேங்கிக் கிடக்கின்றனவாம்!

இப்படித் தேங்கியிருக்கும் பஞ்சு பேல்களின் மதிப்பீடு சுமார் எண்பத்தி நான்கு இலட்சம் ரூபாய்கள் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இதுபோன்றதொரு மந்தநிலை காரணமாக திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களிலேயுள்ள பஞ்சு பயிரிடும் தோழர்களும், விற்பனையாளர்களும் பெரும் அளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது.

மேற் குறிப்பிட்ட தோழர்களது வாழ்வையே நசுக்கிவிடும் நிலையிலிருக்கும் இந்தப் பஞ்சின் உதவி கொண்டுதான் நாற்பதாம் நெம்பர் நூலினைத் தயாரிக்கின்றனர்.

ஆனால் நாற்பதாம் நெம்பர் நூலிற்கோ நாடெங்கிலும் நல்ல 'கிராக்கி' இருப்பதும், அந்த வகையைச் சேர்ந்த நூல்கள் நல்ல முறையில் விற்பனையாகிக் கொண்டிருப்பதும் கண்கூடு.

அது மட்டுமின்றி சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டு அந்த வகை நூல் அதிகமாகவே விற்பனையாகியுமிருக்கிறது.

இருந்தும் அந்த வகைப் பஞ்சு பல ஆயிரம் பேல்களாகத் தங்கியிருக்கிறது.

—இது ஏனென்று கேட்கத் தோன்றுகிறதா? 'நாற்பதாம் நெம்பர் நூலுக்கு நாட்டிலே தேவை அதிகமாக இருக்கிறது; ஆனால் அதை உருவாக்க உதவும் பஞ்சு யாரும் தீண்டத் தகாத பொருளாகிவிட்டதே! —என்று மூக்கிலே விரல் வைத்து ஆச்சரியக் குறிகளுக்கு அழைப்பு விடுக்கும் அவசியம் ஏற்படுகிறதா?

உண்மை நிலையைச் சற்று ஆராய்ந்தால் அதன் மூலகாரணம் ஆட்சி பீடத்திலிருப்பவர்களின் அலட்சியப் போக்கும்; முட்டாள் கொள்கையும் தானென்பது, தற்றென விளங்கும்.

திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களிலேயுள்ளவர்களது வாழ்வையே தின்று ஏப்பமிட முன்வந்திருக்கும் இந்த நெருக்கடியான நிலைமைக்கு, வட நாட்டு ஆட்சிக்காரர்களேமூல காரணமாக இருக்கிறார்கள்.

இதோ அந்த விபரம்:

ஒரு அங்குல இழைக்குக் கூடுதலான இழையுள்ள பஞ்சை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளலாம்—என்று மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இந்த அனுமதியின் விளைவுதான் எவரும் உள் நாட்டு விளைச்சலைத் தொடுவதற்குக் கூட முன் வராமல் போய் விட்டனர்!

இன்னது செய்கிறோம்; அதன் விளைவு இப்படியிருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் சிறிது யோசித்துப் பார்க்காத காரணத்தால் இப்போது தென்னகத்து இரு மாவட்டங்களின் மாந்தர்களது வாழ்க்கையிலே இருள் சூழ்வதற்கான சந்தர்ப்பம் உருவாகி விட்டது.

இப்போது தேங்கிக் கிடக்கும் 14-ஆயிரம் பேல்கள் அன்னியில் விவசாயிகளிடமும் 'ஜின்னிங்' ஆலைகளிலும்கூட ஏராளமான அளவில் பஞ்சு தேங்கிக் கிடப்பதாகக் கூறுகிறார்கள்.

இதுபோன்றதொரு தேக்கம் அந்த மாவட்டங்களிலே பஞ்சுப் பயிருக்குள்ள எதிர்காலத்தை இருட்டாக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

பஞ்சை நம்பினால் நீங்கள் பஞ்சைகளாக வேண்டியதுதான்—என்று அந்த விவசாயத் தோழர்களையும், வர்த்தகர்களையும் நோக்கி எச்சரிக்கை செய்வதாகவும் அமைந்திருக்கிறது.

தென்னகத்து பஞ்சு விவசாயிகளுக்கும்; வியாபாரிகளுக்கும் தீவிபத்து போன்ற தீங்கு நேரிட்டிருக்கும் இந்த வேளையில்தான் நாம் இன்னொன்றையும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்திய உபகண்டத்தில் உருவாகும் துணி உற்பத்தியையும், நூல் உற்பத்தியையும் சென்னை மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அது நமது நெஞ்சிலே வேல் வீசுவதாக இருப்பதைத்தான் உணர்கிறோம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் நூலில் இருபது சதவீதம் நூலைத்தான் சென்னை தயாரிக்கின்றது.

இந்தியாவில் உற்பத்தியாகும் துணியில் ஏழு சதவீதம் துணியைத்தான் சென்னை தயாரிக்கிறது.

மீதமுள்ள எண்பது சதவீதம் நூல் சென்னைக்கு வெளியே தயாராகிறது.

மீதமுள்ள தொண்ணூற்றி மூன்று சதவீதம் துணியை சென்னை மாநிலமில்லாத பிற மாநிலங்கள தயாரிக்கின்றன.

ஆமாம்; சற்றேறக்குறைய பதினைந்தாயிரம் கட்டு ஜவுளித் துணிகள் பிற மாகாணங்களிலிருந்து சென்னைக்குத் தருவிக்கப்படுகின்றன.

இது தவிர, சென்னை மாநிலத்தில் போதிய துணி நெய்யும் ஆலைகள் இல்லாத காரணத்தால் நாம் நூல்களை துணியாக மாற்ற முடியாமல் பம்பாய் போன்ற பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

ஆம்; இந்த நிலையில் சுமார் இருபதினாயிரம் நூல் கட்டுகள் சென்னையிலிருந்து வேறு மாநிலங்களுக்குப் போய்ச் சேருகின்றன.

சுருங்கக் கூற வேண்டுமானால் துணி உற்பத்தியில் நமது மாநிலம் பின் தங்கிக் கிடக்கிறது.

நூலை உற்பத்தி செய்து கொடுத்து விட்டுத், துணி பெற்றுக்கொள்ளும் அளவுக்கு நாம் பின் தங்கிக் கிடக்கிறோம்.

நாம் போதிய அளவு, சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் துணி தயாரிக்கவில்லை; நூல்தான் தயாரித்து, வடக்கே அனுப்பி வந்தோம்; இப்போதோ அதற்கே ஆபத்து அரும்பி விட்டது.

—இவைகளை யெல்லாம் கவனிக்கும்போது சென்னை மாநிலம் பருத்தி விளைச்சலில் முன்னேறுவதைத் தடுப்பதற்குத்தான் வட நாட்டு ஆட்சியாளர்கள் தங்களது இறக்குமதிக் கொள்கையைத் திருத்தி அமைத்து நமக்குக் கேடு புரிகிறார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆட்சியாளர்கள் விரைவில் இதற்கு ஒரு முடிவு செய்து; திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில தேங்கிக்கிடக்கும் ஆயிரக் கணக்கான பேல்கள் நூலனை விலையாக்க ஒருவழி செய்யாவிடில் அந்த மாவட்டத்தைச் சார்ந்த பருத்தி பயிரிடுபவர்களும்; வியாபாரிகளும் உறுமுகிற புலியாகி விடுவார்கள் என்பதைத்தான் எச்சரிக்க விரும்புகிறோம். ●

விரைவில் துவக்கம்!
ஆசிரியர்
மு. க. வின்
சுருளிமலை
புதிய தொடர்கதை

தென்னகத்தில் 'ஹங்கேரி'! தெளிவற்றோரே; பதில் தருவீர்!

ஹங்கேரியிலே எழுந்த புரட்சி முழக்கம் இன்னும் அடங்கவில்லை.

ஹங்கேரி மாந்தர் உயர்த்திப் பிடித்த உரிமைக் கொடி இன்னும் தாழவில்லை.

அதுபோலவே அங்கு திறந்து விடப் பட்ட ரஷ்ய பீரங்கிகளும், துப்பாக்கி வேட்டுக்களும் இன்னும் நின்றபாடில்லை.

அங்கு நடப்பதை தேசிய எழுச்சி என்று வர்ணித்தார், பண்டிதர்!

சோவியத் ரஷ்யாவின் எஜமான உரிமை சாகிறது; 'இரும்புத்திரை'யின் அழிவுக்கு இது ஒரு முதல்படி—என்கின்றனர்.

கூட்டங் கூட்டமாக அந்நாட்டு மக்கள் நாடு கடத்தப் படுகிறார்கள்; அல்லது தாங்களாகவே வெளியேறுகிறார்கள், கொடுமை தாங்க முடியாமல்!

ஆமாம்; எதிர்த்துப் புரட்சி நடத்தியதற்காக ஒரு நாடே இன்று மிதித்து நசுக்கப்படுகிறது.

★★★ எப்பக்கமிருந்தும் ரஷ்யாவின் நடவடிக்கை குறித்து தாக்குதல் கணைகள் பூட்டப்படுகின்றன.

★★ யுகோஸ்லேவியாவின் ஜனாதிபதி டிட்டோ சோவியத்தின் போக்கினை ஆதரிப்பதாக இருந்தார். ஆனால் ஹங்கேரியின் 'மக்கள் தலைவர்' என்று மதிக்கப்படும் இம்ரே நாகி யூகோவின் தூதுவராலயத்திலிருந்து கடத்தப்பட்டு கண் காணாத சீமைக்குக் கொண்டு போகப் பட்டவுடன் டிட்டோவும் சோவியத் போக்குகண்டு சீறி விழத் துவங்கி விட்டார்.

★★ பண்டிதரும் அவருடைய பிரதிநிதியான கிருஷ்ண மேனனும், சோவியத்தின் சொத்தை விழுந்த செயல்களை ஓரளவு மூடி மறைக்கப் பார்த்தார்கள்.

★★ ஆனால் முடியவில்லை, பாவம்! நாலு பக்கங்களிலிருந்தும் வந்த உண்மையின் கிரணங்கள் அவர்களது போக்கினையே மாற்றி விட்டது.

★★ எங்கிருந்தோ வெல்லாம் எதிர்ப்பு வந்து மோதுகிறது ரஷ்யா பக்கம்!

★★ அவர்களுக்குப் பக்கத் துணை வரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக்கூட மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர்.

எப்படியோ இன்று ஹங்கேரி குமுறும் எரி மலையாக, கொந்தளிக்கும் கடலாகக் காட்சி தருகிறது.

திடீரென்று அந்த நாட்டிலே இப்படி ஒரு புரட்சி தோன்றுவதற்குக் காரணம்தான் என்ன?

கரைக்குள்ளே அடங்கி அமைதியாக ஓடிக்கொண்டிருந்த வெள்ளம் இப்போது அணை உடைத்து பள்ளம் நோக்கிச் செல்லும் பாய்ச்சல் நீரைப் போல் தீவிரம் கொள்வானேன்?

❊❊❊ ஹங்கேரி மக்கள் ரஷ்யர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட நினைக்கிறார்கள்; தேசிய உணர்வு பெற்று விட்டார்கள் — என்பதைவிட இதற்கு ஒரு முக்கியமான பொருளாதாரக் காரணமும் இருக்கிறது.

❊❊❊ அந்த நாட்டில் பொருளாதார புனர்வாழ்வுக்குத் திட்டம் தயாரித்து அமுல் நடத்தப் புகுந்த காலை அங்கே சம நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை!

ரஷ்யாவை மனதில் நினைத்துக்கொண்டு; அங்கு இருப்பதைப் போலவே ஹங்கேரியிலும் கனரகத் தொழிலுக்கு மிக அதிகமான முக்கியத்துவம் கொடுத்தனர்.

❊❊ கன ரகத் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நேரத்திலேயே விவசாயம் போன்ற மற்ற துறைகளிலும் போதிய கவனம் செலுத்த வேண்டுமே; அப்போது தானே வளப்ப நிலை ஏற்படும் என்பதை அடியோடு மறந்து விட்டனர்.

❊❊❊ ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு அபிவிருத்தி அவசியம்தான். ஆனால் வாழ்க்கைக்கு இன்றியமையாத இதர துறைகளை மறந்து விட்டு கனரகத் தொழில்களை மட்டுமே பெருக்கிக் கொண்டு செல்லலாமா?

❊❊ ஹங்கேரியிலிருந்த சோவியத்தின் கைப் பொம்மைகள் இந்தத் தவறினைத்தான் செய்தனர்.

❊❊❊ கன ரகத் தொழில்கள் வளர்ந்தன. அதற்குக் காட்டப்பட்ட ஆர்வத்தில் ஆயிரத்துள் ஒரு பங்குகூட வாழ்க்கையின் இதர அத்யாவசியப் பொருள்களைப் பெருக்குவதற்குக் காட்டப்படவில்லை.

❊❊ விவசாயம் புறக்கணிக்கப்பட்டது; கனரகத் தொழில் மட்டும் வளர்ந்தது!

●●● சிறு வயது முதலே ஒரு கையை உபயோகித்து வரப் பழக்கப்படும் குழந்தை தனது வளர்ச்சியில் இன்னொரு கையின் உபயோகத்தை இழக்கிறது.

●●● இளமைப் பிராயத்திலேயே வெட்டாது விடப்பட்ட வாழை மரம் போன்றவை பின்வளர மறுக்கின்றன.

●●● இதே நிலைதான் இப்போது ஹங்கேரியிலும் உருவாகிவிட்டது!

●● கனரகத் தொழில்களை மட்டுமே பெருக்கி வந்ததால் இதர துறைகள் அங்கே அலட்சியம் செய்யப் பட்டன.

●● வாழ்க்கையை அதிக வசதியுடையதாக்கும் பண்டங்களின் தயாரிப்பு வெறுத் தொதுக்கப்பட்டது!

●● அதன் விளைவாக ஹங்கேரியின் வாழ்க்கைத்தரமோ மிகவும் பயங்கரமான அளவில் குறைய ஆரம்பித்தது!

●● வாழ்க்கைத் தரம் மிகவும் கெட்டுவந்த காரணத்தால் பொதுமக்களின் பால் அதிகமான அளவுக்கு அதிருப்தி வித்திடப்பட்டது!

★★★ இதன் விளைவைத்தான் இப்போது ஹங்கேரியிலே காணுகிறோம்!

★★★ சமநிலை அல்லாத பொருளாதாரம் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்து; வறுமையைப் புகுத்தி; அங்கே புரட்சிக்குப் பாக்கு வைத்து விட்டது!

ஹங்கேரி தந்திருக்கும் இந்த அபாய அறிவிப்பிலிருந்து இன்று அகில உலகமும் பாடம் பெற வேண்டியதாய் இருக்கிறது!

ஒரு தலைப்பட்ட பொருளாதாரம் ஒரு நாட்டின் நல்வாழ்விற்கே உலை வைத்து விட்டது! —ஆனால் இதிலிருந்து பாடம் பெறுவதாகத் தெரியவில்லை, இந்த நாட்டு அரசினர்!

ஹங்கேரியிலே சமநிலையில்லா பொருளாதாரத்திற்கு முன்பு அஸ்திவார மிடப்பட்டு; அவதிக்கு அழைப்பு விடப்பட்டதோ அதே செயல் முறைதான் இங்கும்—ஆனால் வேறு விதத்தில் அமுலாக்கப் படுகிறது!

●●● ஹங்கேரியிலே கனரகத் தொழில்களுக்கு முதலிடம் தந்தார்கள்! விவசாயம் போன்ற இதர துறைகளை மறந்தார்கள்.

இங்கோ முதலிடம் தரப்பட்டது — கனரகத் தொழில்களுக்கு மட்டுமல்ல —கனம்கள் மட்டுமே அதிகமாக வாழ்கின்ற வடநாட்டுச் சீமைக்கு!

கனரகத் தொழில்கள் அல்லாத விவசாயம்போன்ற துறைகள் புறக்கணிக்கப்படவில்லை இங்கே; ஆனால் 'விதி'யற்றவர்கள்; கேட்டுவாங்க வகையற்றவர்கள்; வீணாகப் போனவர்கள் என்று கருதப் படுகிற தென்னாட்டார்கள் இங்கே புறக்கணிக்கப் பட்டார்கள்!

ஆலைகள் யாவும் குவிந்தன வடக்கே! பாலையாகிறது தெற்கு!

புன்னை மரத் தோப்பில் பொன்னூசல் கட்டி விளையாடும் கட்டிளங் குமரிபோல் எழிலும் பொலிவும் பெறத் துவங்கியது வடக்கு; வழக்கம் போலவே புழுதியில் கிடந்து புரண்டது தெற்கு!

குளிர் மலர்ச் சோலையிலே தளிர் நிகர் மாதரைத் தழுவிக் கிடப்பவர்போல் ஆலைகளும்

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

நில், கேள், போ!

○●○

பினாங்கிற்கு நாங்கள் காரில் சென்று கொண்டிருக்கிற பொழுது சாலையோரங்களிலும், நாற்சந்திகளிலும் பார்த்த சில அறிக்கைப் பலகைகள் என் கருத்தை ஈர்த்தன. 'நில், கேள். போ' எனப் பல இடங்களில் போடப்பட்டிருந்த பலகைகள், ஸ்டாப் லிஸர்ன்—ப்ரொசீட் என்பதன் மொழி பெயர்ப்புப்-பலகைகள் என்பதைக் கண்டேன். இன்னும் பல இடங்களிலும் நல்ல தமிழில் ஆங்கில அறிக்கையே இல்லாமல் வலதுபுறம் உள்ள வண்டியை முன் செல்ல விடுங்கள் என்று வரையப்பட்டிருந்தது. தமிழர்கள் நூற்றுவரில் பத்துபேர் உள்ள மலாயா நாட்டிலே இவ்வாறு தமிழ் முழங்குவதைக் கண்டு மகிழ்ச்சி எய்தினேன். தமிழர்கள் வாழுகின்ற தமிழ் நாட்டிலே தமிழ் மொழி வாயிலாக இவ்வறிக்கைப் பலகைகள் முழுவதும் இயற்றப்படும் நாள் விரைவில் வாராதா எனக் கருதிக் கொண்டே அந்நேரங்களில் எல்லாம் நான் சென்றது உண்டு.

டாக்டர் அ. சிதம்பரநாதன்.

காதலுக்குக் கண்ணில்லை

தொடர் நாடகம்

தில்லை வில்லாளன் எம். ஏ.,

(காட்சி-19 தொடர்ச்சி.)

ஆளவந்தான்: அந்தோ! என் நிலையறியாமல் பேசுகிறாய். நான் உன் அருகிலே இனி இருக்க முடியாது. உன் அழகு முகத்தை இனி காணவே கூடாது. ஆம், அது என் உறுதி மிக்க கரத்தை, தன் கடமையைச் செய்யாமல் தடுமாற வைத்து விடும்! வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், வெளியேற எனக்கு அனுமதி கொடு—உன்னை மறந்து விடுகிறேன்—அதற்காக மன்னித்து விடு!

பொன்மேனியாள்: என்ன? கொதிப்பேறிய தங்கள் பொன் உதடுகளால் பதித்த முத்தங்களின் ஈரம் கூடக் காயவில்லை. அந்த இன்ப 'இச்'சொலியின் ஓசை இன்பம் காதுகளில் ஒலித்தபடி இருக்கிறது. அதற்குள்ளாக தாங்கள் கூறிய உறுதி மொழிகளை மறப்பதா?

ஆள: அவைகளை நான் திரும்பப் பெறுகிறேன்!

பொ: வேடிக்கை கலந்த வேதனை கண்ணாளா—திரும்பப்பெறும் திருவாக்குகளா அவை? அதோ, காற்றிலே மிதந்து வரும் கானமாக வானம்பாடி பாடிக் கொண்டிருக்கிறதே, அந்தக் காதல் மொழிகளை!

ஆள: நம்மிடையே பெரியதோர் தடுப்பு அரண்—அதனை அறியவில்லை நான்—இல்லை; மறந்து போனேன் நான்!

பொ: அரசி என்ற அந்தஸ்து அரணைத்தானே குறிப்பிடுகிறீர்கள்? அதனை உங்களுக்காக இழக்க சித்தம் காதலா!

ஆள: (வேகமாக) உலகம் நம் இருவரின் இணைப்பைப் பார்க்க விரும்பவில்லை—பார்க்கவும் முடியாது! வழி விடு—விடை கொடு—வருகிறேன், வணக்கம்.

பொ: (ஆர்வத்தை அடக்கிக் கொண்டு, அமைதியாக) வருகிறேன்! வணக்கம் கூற வா என் வாழ்விலே குறுக்கிட்டீர்கள்—கள்ளிக் காடாக இருந்த என் இதயத்தை காதல் மலர்த் தோட்டமாக மாற்றினீர்கள்?

ஆள: ஆ............

பொ: என் இதயம் பாழடைந்த மண்டபமாகக் கிடந்தது. அதனைப் பளிங்கு மண்டபமாக மாற்றினீர்கள் இப்பொழுது அதிலிருந்து ஒரு சிறு கல்லை அசைத்தாலும் மண்டபம் மண் மேடாகி விடும். அன்பரே, என் வரண்ட வாழ்வில் வான் மழையாக ஏன் நுழைந்தீர்? பூட்டிட்ட இன்பக் கதவுகளை ஏன் திறந்தீர்?

ஆள: அந்தோ!

பொ: காட்டாற்றல வெள்ளம்வந்தால் வயலை, நிலத்தையெல்லாம் நீர் புகுந்து நாசமாக்குவதுபோல என் அன்பு ஏரி உடைத்துக் கொண்டு உள்ளம், உடல் எல்லாம் பாழாகி விடும்! மீண்டும் அன்பு ஏரிக்கு கரை கட்டி, இழந்த நீரை எப்படிப் பெற முடியும்? இதோ கண்களிலிருந்து கொட்டுகிறதே! அன்பு ஏரியிலிருந்து கிளம்பிய நீர்தான்—கண்ணீராக வழிகிறது! அது எப்படி உப்பாக கரிக்கிறதோ, அப்படியே என் வாழ்வும் கைத்து விடும்!

ஆள: தேவி. உன்னைத்தொழுது கேட்கிறேன்—அழுது கேட்கிறேன்—மேலும் பேசாதே! என் மனதைக் குழப்பாதே! உன் வாழ்விலிருந்து—உன் காதல் கட்டிலிருந்து விடுபட்டு, என் பாதைக்கு—உன்னால் பின்பற்ற முடியாத என் பாதைக்குச் செல்ல வேண்டும்!

பொ: நான் கேள்விப்பட்டிருக்கிறேன் கண்ணாளா—நடுக் கடலில், தாகந் தீர்த்திட தண்ணீரின்றி தவித்து, சாவைத் தழுவிய கடல் வீரர்கள் கதையை! அவர்கள் கண்களை மூடியபடி, கனவு பல காண்பாராம். பச்சைப் பசேரெனும் பசும் புல் தரையை, பக்கத்திலோடும் அருவியை, இசை முழங்கும் பறவைகளையெல்லாம் கண்டு மகிழ்வராம்—எல்லாம் கனவில்! தூக்கம் தீர்ந்ததும் கடல் பரப்பைக் காண்போர்—ஆசைக் கனவுகளை எழுப்பிய தூக்கத்தைச் சபித்துக் கொண்டே சாவாராம். அன்பரே, நானும் அந்நிலையில் தானுள்ளேன—காதல் மறிவெனும் கடல் வெளியில் கிடக்கிறேன்—உறக்கம் போல் வந்து இன்பக் கனவுகளை கிளப்பினீர்கள்—இதோ கண்விழித்த நிலையில் நான் நிற்கிறேன்—கடல் வீரர்கள் உறக்கத்தை காய்வது போல, உங்களை நான் திட்டமாட்டேன்.

ஆள: ஐயோ, நான் என் செய்வேன்?

பொ: காதலா, நீங்கள் எங்கேயும் போகக்கூடாது—என் மாறாத காதலை மறுக்காதீர்கள். (பதிலுக்கு ஆளவந்தான் பேசாததைக் கண்டு) எதிரொலி இறந்து போனதா? நான் காதலை மறுக்காதீர்கள் என்கிறேன்; ஊமையைப் போல நிற்கிறீர்களே!

ஆள: எல்லாம் இறந்து விட்டன—ஆனால் ஒன்றே ஒன்றுதான் உயிரோடிருக்கிறது—அதுவும் இன்றிரவு மடிந்து விடும்!

பொ: அப்படியானால் 'சென்று வாருங்கள்' என்று தங்களுக்கு கடைசி விடை தர, நாக்குக்கும்—நாக்கொலி வெளிக் கிளப்பும் உதடுகளுக்கும் பயிற்சி தர வேண்டும். இந்த நிமிடம் வரை, அவை அந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லை. நான் எவ்வளவு முயற்சித்தாலும் அவை, நான் உங்களைக் காதலிக்கிறேன் என்றே ஒலிக்கின்றன. நான் அவைகளைக் கண்டிக்கவா? அப்படியானால், ஒன்றையொன்று பிரியாமலிருக்கும் அவை குற்றவாளிகளே! ஏனெனில், இன்னமும் அந்த வார்த்தைகளைக் கூற மறுக்கின்றன.

[ஆளவந்தான், அவளருகில் நெருங்கி வருகிறான். இதுவரை பெண்மையெனும் நாணயத்தின் தண்மை பக்கம் காட்டிய பொன்மேனியாள், அதன் வெம்மை பக்கம் திருப்புகிறாள்.]

பொ: தாங்கள் போகத்தான் வேண்டுமென்றால் போகலாம்—ஆனால் என்னைத் தொட வேண்டாம்! (ஆளவந்தான் போகிறான்.) மீண்டும் வர வேண்டாம்; எந்தக் காரணத்தைக் கொண்டும் வர வேண்டாம். நான் என்ன செய்ய வேண்டும் என்பது இனி எனக்கு நன்றாகத் தெரியும். காதல் ஒளியை, இனி இடுகாட்டு வெளிச்சமாக மாற்றுகிறேன். அரும்பு விட்ட காதல் மலர்களை பிணத்திற்கு போடும் மாலையாக்குகிறேன். காதல் கீதத்தை சாக்காட்டு சங்கீதமாக்குகிறேன். சாகிறேன், அன்றில் பறவை போல, அழுதபடி! ஓ துன்பமே! உன்னை மிக நன்றாக நான் அறிவேன்—என் வாழ்வில் உனக்குப் புக ஆசையாக இருந்தால், காதல் பிரிவெனும் உருவில் ஏன் வர வேண்டும்—நோயின் வாயிலாக வந்திருக்கலாமே! காதல் குயில் குரலாக இருக்க வேண்டாம்—ஆந்தையின் அலறலாக மாறி விடலாமே! காதல் ஒளிகாட்டும் கருவிழியாகாமல், கண்ணொளியிழந்த குருட்டு விழியாக வந்திருக்கலாமே! இப்படி உருவெடுத்திருந்தால் கூட.

தொடர்ச்சி 8-ம் பக்கம்

நாட்டு நடப்பு!

● சென்ற பொதுத் தேர்தலில் அடைந்த பெருமிதமான வெற்றி வரப்போகும் தேர்தலில் தங்கள் கட்சிக்குக் கிடைக்குமா என்பதில் காங்கிரஸ் தலைவர்களுக்கே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் இதற்கு முன்பு காங்கிரஸை யார் யார் முழு மனதுடன் ஆதரித்தார்களோ அவர்கள் எல்லோருமே இப்போது அக்கட்சியின் மீது அதிருப்தி கொண்டுள்ளார்கள்! காங்கிரசுக்காகப் பாடுபட்ட காங்கிரஸ் தியாகிகளே அதை எதிர்க்கத் துணிந்து விட்டனர். காங்கிரஸை ஆதரித்த பார்ப்பனர்கள் இப்போது அதை வெறுக்கின்றனர்.

வியாபாரிகள் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட சித்தமாயிருக்கின்றனர்.

தொழிலாளர்களைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. அடுத்த தேர்தலில் காங்கிரஸை முறியடித்தே தீருவோம் என்று கச்சை கட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

காங்கிரசின் தற்போதையக் கொள்கைகள் மக்களுக்கு அதிருப்தியைக் கொடுத்தபோதிலும் அது அதிகாரத்தில் இவ்வளவு காலம் எப்படி இருந்து வரமுடிந்தது என்று ஆச்சரியப்படத் தேவையில்லை!

அமெரிக்காவில்கூட, அது பிரிட்டிஷாருடன் போரிட்டு சுதந்திரமடைந்த பின்னர் தேசியக் குடியரசுக் கட்சி என்ற ஒரே கட்சிதான் அங்கு ஆட்சி பீடத்திற்கு வந்தது. ஆனால் காங்கிரஸ் கட்சி இத்தனை ஆண்டுகளாய் அதிகாரத்திலிருந்து வரமுடிகிறதே என்பதற்காக தேச மக்களின் முழு ஆதரவும் அதற்கே இருக்கிறதென்று யாரும் நினைத்துவிடலாகாது.

—சிங்கை 'தமிழ் முரசு' [18—11—56.]



காட்சி—12

இடம்: போலீஸ் ஸ்டேஷன்

[சப் இன்ஸ்பெக்டர், போலீஸ் பொன்னுரங்கம் ஆகியோர் இருக்கிறார்கள். பலவேஷம் வேகமாக ஓடி வருகிறார்....]

பலவேஷம்: இன்ஸ்பெக்டர் சார்!... நமஸ்காரம்! ஒரு அவசரமான தகவல்! நம்ம சமயோஜிதம் பிள்ளை மகள் கண்ணம்மாவை திடீர்னு காணோம்!...

சப் இன்: காணோமா? எங்க போயிட்டா? ...

பலவே: அதுதான் சார் தெரியிலே... அது தெரிஞ்சா நான் ஏன் இங்கே வர்ரேன்!

சப்: வீட்டில் ஏதாவது கோபமா?...

பல: அப்படி யொண்ணும் இல்லை சார்!...

சப்: புருஷன் பெண்டாட்டிக்குள்ளே ஏதாவது தகராறு உண்டோ?

பல: இல்லை சார்...அவுங்களுக்குள்ளே தகராறே வராது சார்!...

சப்: உனக்கு நிச்சயமா தெரியுமா; தகராறு வராதுன்னு?

பல: தெரியும் சார் — எப்படின்னு கண்ணம்மாவுக்கு இன்னும் கல்யாணமே ஆகலே சார்!

சப்: அப்ப யாராவது திருட்டுத் தாலி கட்டுவதற்குத் தூக்கிப் போயிருப்பார்களோ?...

பலவே: அய்யோ—இது என்னடா வம்பா இருக்கு! இனிமே போலீஸ் ஸ்டேஷன்ல கேஸ் கொடுக்க வர்ரதுன்னு......ஜோசியர் வீட்டுக்கு முதல்ல போயிட்டுல்ல வரணும் போலிருக்கு!

சப்: என்னுமேன்......ஏதேதோ பேசுறே?...நோயின் விபரத்தை டாக்டர் கிட்ட ஒழுங்கா சொல்லணும்... அதே மாதிரி கேஸ் விபரத்தையும் போலீசு கிட்ட சொல்லணும்!...

பலவே: சரி சார்; குறுக்குக் கேள்விக்கு இடமில்லாமலே எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லி விடுகிறேன்...

சமயோஜிதம்பிள்ளை என்ற பிரபல காங்கிரஸ்காரரின் மகள் கண்ணம்மா பதினெட்டு வயது நிரம்பியவள். பார்வைக்கு மயில் போலவும் பாடினால் குயில் போலவும் இருக்கும். ஐந்தடி மூணு அங்குலம் “ஹைட்”! அழகான “பாடி”! அகன்ற நெற்றி! சுருண்ட தலைமயிர்! உருண்ட விழிகள்!

சப்: போதும் நிறுத்தய்யா!... இது என்ன போலீஸ் ஸ்டேஷனு; பஜனை மடமா?...

பலவே: என்னுங்க நடக்கிறது; நம்ப சர்க்கார்! இதிலே பார்லிமெண்டைக் கூட பஜனை மடமா ஆக்கிக்கொள்ள வேண்டியது தானே!...

சப்: சரி; சரி நீ போகலாம்... [பொன்னுரங்கத்தைப் பார்த்து]

நீ போய் அந்தப் பெண் காணமற் போனது சம்பந்தமாக புலன் விசாரித்துவா...உடனே புறப்படு!...

பொன்: எஸ் ஸார்!...[வணக்கம் தெரிவித்துவிட்டு பொன்னுரங்கம் புறப்படுகிறான்.]

(திரைவிழுகிறது)

காட்சி—13

பொன்னுரங்கம் வீடு:

[மரகதம், குழந்தையுடன் கண்ணீர் வடித்தபடியிருக்கிறாள். உத்திரத்திலே ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கயிற்றைக் கையிலே பிடித்தவாறு குழந்தையுடன் புலம்புகிறாள்.]

மரக: கண்ணே! உன்னை விட்டு விட்டுப் போகிறேனடா! இத்தனை ஆண்டுகளாக ஆனந்தமாக வாழ்ந்தேன் உன் அப்பாவுடன்! ...அது பொறுக்கவில்லை; யாரோ ஒரு பாவிக்கு...... எங்கள் நிம்மதியான வாழ்க்கையிலே வந்து பிரவேசித்து விட்டான் நாசகாரன்!

அடுப்பு மூட்டப்படாமல் இருந்த நாட்கள் எல்லாம் உண்டு இந்த வீட்டில்... அப்போதெல்லாம்கூட நெஞ்சிலே தீ மூள்வதில்லை ...பசியாலும் பட்டினியாலும் வாடிய நாட்கள் உண்டு; அப்போதுகூட பந்தமும் பாசமும் அறுபடக் கூடிய ஒரு சொல் எழுந்ததில்லை எங்கள் இல்லறத்தில்!...மாருத களங்கம்!......இழிவு நிறைந்த பழிச்சொல்லுக்கு ஆளாகிவிட்டேனடா இப்போது!

“நம்பிக்கையில்லை உன் மீது” என்று அவரே என்னை எட்டி உதைத்த பிறகு நான் வாழ வேண்டுமா அவர் வாழ்வுக்குச் சுமையாக!

உன்னை மட்டும் அவரிடத்திலே விட்டு விட்டுச் செல்கிறேன். உன்னையும் விட்டுச் செல்ல எனக்கு மனமில்லைதான்! எனக்குப் பிறகு உன் தந்தைக்கு வாய்க்கப்போகிற இரண்டாந்தாரக்காரி உன்னைப் பார்த்து நடத்தை கெட்டவளின் மகன் என்று தூற்றக்கூடும்......அதை நீ எப்படி சகித்துக்கொள்வாய்! உன் தந்தைக்கே உன்மீது பற்றுக் குறையும்! அப்போதெல்லாம் என்னையல்லவா சபிப்பாய்! மகனே! உன்னிடத்தில் அந்தசாபம் பெற்று என் கல்லறை கண்ணீர் உகுப்பதைவிட இப்போதே உன் சமுத்தையும் நெறித்துவிடலாம்!... அய்யோ......எப்படியடா உன்னைக் கொல்வேன்— தாய் மகனைக் கொல்வதா? ...அதுவும் தமிழ் நாட்டில் பிறந்த ஒரு தாய் தன் குல விளக்கை அணைப்பதா? என்னடா பார்க்கிறாய்?...

“ஏனம்மா என்னைக் கொல்லத் தயங்குகிறாய்? இந்த ஏகாதிபத்தியக்காரர்களின் எடுப்பார் கைப் பிள்ளைகளின் ஆட்சியிலே எத்தனையோ தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை ஆற்றிலோ, கிணற்றிலோ போட்டுக் கொன்றிருக்கிறார்களே; அதைப் போலவே என்னையும் கொன்று விடு!”

என்று விழியாலே பேசுகிறாயா?......என் இன்ப விருந்தே!...உன்னை நான் கொல்ல மாட்டேன்... உன்னைக் கொல்வதற்காகவா பத்து மாதம் சுமந்தேன்......பாலூட்டி சீராட்டி வளர்த்தேன்..... முடியாது! உன்னை நான் கொல்ல முடியாது!... இதோ நான் உன்னிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். என் பிணத்தைப் பார்த்த பிறகாவது உன் அப்பாவின் உள்ளம் உருகட்டும்! நான் களங்கமற்றவள்—கற்புநெறி தவறுதவள்—என்ற உண்மையை சாயப்போகும் என் சவம் உணர்த்தட்டும்!...... இதோ என் கடைசி முத்தங்களைப்பெற்றுக் கொள்ளடா என் கண்மணி!

[முத்தமாரி பொழிகிறாள். குழந்தை அழுகிறது கயிற்றை சுருக்கிட்டு, அதில் தலையை நுழைத்துக் கொள்ளும் போது, கண்ணம்மா ஓடி வந்து அவளைப் பிடித்துக் கொள்கிறாள்]

மரக: யார் நீ...விடு என்னை... என்னை ஏன் தடுக்கிறாய்?

கண்: பைத்தியக்காரப் பெண்ணே! தற்கொலை செய்து கொள்வதால் உன் மீது ஏற்பட்ட மாசு மறைந்துவிடுமா?

மரக: என்ன?...உனக்கு எப்படித் தெரியும் என்னைப் பற்றி?...

கண்: எல்லாம் எனக்குத் தெரியும் —— முரடர்களுக்குப் பயந்து உன் வீட்டு மூலையில் பதுங்கிய தியாகி கறுப்பனுக்கும் தூய்மை நிறைந்த உனக்கும் தொடர்பு படுத்தி துரோகிப் பட்டம் கட்டிய உன் கணவனுக்கு நீ தரும் பதில் தான் இந்தத் தூக்குக் கயிறு!

மரக: ஆமாம்! மானமிழந்த பிறகு உயிர் வாழ்வானேன்?.....விடு என்னை.... நீ போய்விடு!

கண்: மானமிழந்தாலல்லவா மரணத்தை நாட வேண்டும்!...இப்போது உலகத்தில் மானமிழந்தவர்களே மரணத்தை நாடுவதில்லை!...நீ ஒரு போலிக் குற்றச்சாட்டுககுப் பயந்து தளிர் மகன் தன்னை தனியே ஏங்கவிட்டுப் போகத் தீர்மானித்து விட்டாயே; நியாயமா இது?...

மரக: கணவனுடைய உள்ளத்திலே நம்பிக்கையான இடத்தை பெற முடியாத நான் நடைப் பிணம்போல வாழ விரும்பவில்லை சகோதரி!...என்னை விட்டுவிடு! உன் அன்புக்கு நன்றி!

கண்: உன் கணவனுக்கு நான் பாடங் கற்பிக்கிறேன்... அவரே வந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்கும்படியாகச் செய்கிறேன்.

மரக: அதெல்லாம் இனிமேல் நடக்காத காரியம், வெறுங் கனவு!

கண்: கனவல்ல; சந்தேகம் கொண்ட கணவனின் உள்ளத்தைப் பண்படுத்துவது தான் உறுதி நிறைந்த ஒரு பெண்ணுக்கு அழகு!... நீ தற்கொலை செய்து கொண்டால் மாத்திரம் தப்பித்து விடுவாயா?

நாளைக்கு ஊரிலே பேசுவார்கள் — "அவள் ஒரு மாதிரி—பல நாள் திருடி ஒரு நாள் அகப்பட்டுக் கொண்டாள்!,....கணவன் தொலைத்து சித்திரவதை செய்து விடுவானே யென்று பயந்து தற்கொலை செய்து கொண்டாள்!" என்று! அதை இந்த முடிவு தடுத்துவிடும் என்று நீ நம்புகிறாயா?...

[மரகதம் யோசித்தவாறு அழுகிறாள்]

கண்: அழாதே!...நான் ஒரு வழி சொல்லுகிறேன்......தயவு செய்து கேள்...பிறகு எல்லாம் நன்மையாகவே முடியும்.

[மரகதத்தின் காதில் கண்ணம்மா மிக ரகசியமாக ஏதோ சொல்லுகிறாள். மரகதம் சிறிது தயங்குகிறாள். மீண்டும் கண்ணம்மா ஏதோ சொல்லவே மரகதம், குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டை விட்டு வெளியே போகிறாள். கண்ணம்மா மட்டும் வீட்டில் தனியே உலவிக் கொண்டிருக்கிறாள். அப்போது போலீஸ் பொன்னுரங்கம், அமைதியற்ற முகத்துடன் வீட்டுக்குள் வருகிறான். அவன், அங்கிருக்கும் கண்ணம்மாவைப் பார்த்து வியப்படைகிறான்]

பொன்: யார்?...

கண்: வணக்கம். என்னைத் தெரியவில்லை? நான்தான் காங்கிரஸ் மேதை சமயோஜிதம் பிள்ளையின் மகள். கண்ணம்மா என் பெயர்!...

பொன்: அடேடே...கண்ணம்மாவா?...உன்னைத் திடீரென்று காணோமென்று இப்போதுதானே போலீஸ் ஸ்டேஷனுக்கு 'ரிப்போர்ட்' வந்தது?

கண்: ஆமாம்...சாயங்காலம் உலவுவதற்காக வீட்டை விட்டுத் தனியே புறப்பட்டேன். யாரோ நாலைந்து காலிகள் என்னை வட்டமிடத் தொடங்கினார்கள். நானும் தப்பிவிட முயன்றேன். முடியவில்லை. நல்ல வேளை...கடைசியாக அவர்கள் கண்ணில் படாமல் இந்த வீட்டுக்குள் நுழைந்து விட்டேன். வீட்டில் நுழைந்து பார்த்தால் யாருமில்லை. வெளியே போகவும் பயம்!

பொன்: சரியான வேலை செய்தாய்! இந்தக் காலத்தில் பண்பு கெட்ட கயவர்கள் நிறையப் பேர் அலைகிறார்கள்...அவர்கள் கையில் நீ அகப்பட்டிருந்தால்...

கண்: குரங்கு கைப் பூமாலை...காங்கிரஸ் கையில் சுயராஜ்யம்.......என்ன பாடு படுகிறதோ அந்தப் பாடு பட்டிருப்பேன்!...

பொன்: என்னம்மா இது; அப்பா பெரிய காங்கிரஸ் காரரு...நீ அவருக்கு விரோதமாப் பேசுறே!

கண்: அப்படின்னா...காங்கிரஸ் சர்க்கார்லே வேலை பாக்கிற நீங்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சியை திருப்தியோடு வாழ்த்துகிறீர்களா?

பொன்: நாங்க மட்டுமா? குழந்தை குட்டிகளோடு ஆலாப் பறக்கிற உபாத்தியாயர்கள் – குமாஸ்தாக்கள்—என். ஜி. ஓ. க்கள் இப்படிப் பல பேரு; காங்கிரசை அமோகமா வாழ்த்திக்கிட்டுத்தான் இருக்கிறார்கள்!...

'காங்கிரஸ் அடியோடு "வாழ்க"!' அப்படின்னு அவுங்க அடி வயிறு எரிய எரியக் கத்துறாங்க!

கண்: ஆமாம்......அதிருக்கட்டும்; வீட்ல யாருமே இல்லையா?...

பொன்: இல்லை!

கண்: இப்படி கதவைத் திறந்து போட்டிருக்கீங்களே....... காங்கிரஸ் கட்சி மாதிரி; யாரு வேண்டுமானாலும் வரலாம்—யாரு வேண்டுமானாலும் போகலாம்!

பொன்: காங்கிரஸ் கட்சி நீ சொல்றது மாதிரி இல்லேம்மா!...யாரு வேணும்னாலும் வந்து யார் வேணுமானாலும் போகிற சத்திரம் அல்ல காங்கிரஸ்!... இப்போது பணக்காரர்கள் மட்டுமே வரக்கூடிய மாளிகையாக்கும் அது!

(இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது, மரகதம் குழந்தையுடன் ஆத்திரமாக உள்ளே பிரவேசிக்கிறாள்.)

மரக: ரொம்ப நல்லாயிருக்கு!... என்மேல பழி சுமத்தி என்னை வீட்டை விட்டு வெளியே போடின்னு துரத்திப்பிட்டு.........இவளோட கொஞ்சுவதற்கா திட்டம்போட்டீர்கள்...? புரிகிறது; புரிகிறது!

கண்: யார் இது?

மரக: சும்மா இருடி!...யார் இதுன்னா கேக்கிறே? நான் தான் இவரோட மனைவி!... மரகதம்!......மரியாதையா வெளியே போ! என் புருஷனை மயக்கினது மில்லாமல் பாசாங்கு வேறயா பண்றே?

பொன்: ஏ, மரகதம்! வாயை மூடு!...என்ன உளறுகிறாய்? உன் யோக்கியதைக்கு என்னை வேறு குற்றம் சொல்லுகிறாயா?

மரக: சும்மா நிறுத்தய்யா! நீர் செய்ற வேலைக்கு நிரபராதியான என்னைக் குற்றம் சுமத்தி வீட்டை விட்டுப் போடின்னு பயமுறுத்திறியா?......வாயை மூடவாம்ல வாயை! இப்பவே ஊர் முழுக்க தம்பட்டம் போட்டு அடிக்கிறேன்! சப் இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு நேராப் போறேன்—கள்ளக் காதலியா கேட்குது: கள்ளக் காதலி!

பொன்: கண்ணம்மா! இவ பேசுறதைப் பாத்தியா? நம்ப ரெண்டு பேருக்கும் எவ்வளவு பெரிய களங்கத்தை சுமத்துறாப் பார்த்தியா?...

கண்; அம்மா மரகதம்! கண்ணால கண்டதும் பொய்—காதால கேட்டதும் பொய்! தீர விசாரிப்பது தான் மெய்!

மரக: அதை அவரு கிட்ட சொல்லு!......குடும்பம் இருக்கிற நிலையிலே, ஒரு குழந்தைக்கு வேறே தகப்பனாயிட்டு. அடுப்பங் கரைக்கு ஒரு பெண்டாட்டி—ஆனந்தமாயிருக்க ஒரு பெண்டாட்டியா?...

பொன்: என்ன சொன்னே? கொன்னுடுவேன் கொன்னு!...

[கையை ஓங்குகிறான் அதைத் தடுக்கிறாள் கண்ணம்மா]

கண்: அவசரப்படாதீர்கள்! அந்த அம்மாவின் சந்தேகத்தை நிதானமாகப் போக்கலாம். என்ன செய்வது; அவசர முடிவுக்காரர்களால் எத்தனையோ குடும்பங்கள் அழிந்து விடுகின்றன! உதாரணத்துக்கு ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்; என் காதலர் கறுப்பன் என்பவர் சில முரடர்களுக்குப் பயந்து யாரோ ஒரு போலீஸ்காரர் வீட்டில் ஒளிந்து கொண்டாராம்; என்னைப்போல! தூங்கிக் கொண்டிருந்த அந்தப் போலீஸ்காரர் மனைவிக்கு அவர் ஒளிந்தது தெரியாதாம்......வீட்டுக்கு வந்த போலீஸ்காரர் தன் மனைவியின்மீது சந்தேகப் பட்டு விட்டாராம்... அதே போலத்தான் இப்போதும் நடந்து விட்டது! இதில் என்ன ஆச்சரியமென்றால், என் காதலர் சிக்கிக் கொண்ட வீடும் போலீஸ்காரர் வீடு! நான் சிக்கிக் கொண்ட வீடும் போலீஸ்காரர் வீடு!...

பொன்: என்ன...அப்படியா? ...கண்ணம்மா! அந்தக் கறுப்பன்...உனக்கு...

கண்: காதலர்! களங்கமற்றவர்!...அவர் மட்டுமல்ல— அந்தப் போலீஸ்காரர் மனைவியும் களங்கமற்றவள் என்று கூறி அவர் கண்ணீர் வடித்தார்!

பொன்: உண்மையாகவா?......

கண்: நான் ஏன் போலீஸ்காரரிடம் பொய் சொல்ல வேண்டும்—திருடினேனா? அல்லது கள்ளச் சாராயம் காய்ச்சினேனா?

பொன்: அப்படியானால் மரகதம் மாசற்றவள்! மரகதம் மாசற்றவள்!... ..மரகதம்! என்னை மன்னித்துவிடு!...

கண்: என்னது...ஆச்சரியமா இருக்கு!

பொன்: கண்ணம்மா, உன் காதலன் மீதும் என் மனைவி மீதும் சந்தேகப் பட்ட சண்டாளன் நானே தான்!...

கண்: நல்ல சந்தேகம்...உங்களைப் போன்ற அவசரக்கார ஆண்களால் எத்தனை அபலைகளின் வாழ்வு அணைந்து போயிருக்கிறது —இன்னேரம் நான் வந்திருக்காவிட்டால் உமது மனைவி தூக்குக் கயிற்றிலே ஆடிக் கொண்டிருப்பாள்!...

புருஷனின் உள்ளத்திலே புயல் ஏற்படக் காரணமாகிவிட்டோமே யென்று புலம்பி இறுதியாக அவள் தேர்ந்தெடுத்த மார்க்கம் தற்கொலைதான்!...

பொன்: அப்படியா?......கண்ணம்மா......நீதான் என் கண்களைத் திறந்தாய்! இல்லாவிட்டால் என் குடும்பமே அழிந்திருக்கும்......

கண்: மரகதம்! எப்படி இந்தக் கண்ணம்மா காட்டிய வழி?

மரக: ஆச்சாரியாரின் கண்ணன் காட்டிய வழியைவிட சிலாக்யமானது! சிறப்பானது!......

(திரை விழுகிறது)

○ தொடரும் ○



தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடுபட்ட தங்கம்; தரணி போற்றும் பகுத்தறிவுச் சிங்கம்; அரசியல் மேதை; அஞ்சா நெஞ்சு படைத்த ஆற்றலரசர்; ஆதித் திராவிட மக்களின் தலைவர்—அறிஞர் அம்பேத்காரின் புகழ் வாழ்க! வாழ்க!!

ஒரே எதிர்க் கட்சி!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க் கட்சியாக இருந்துவந்தது திராவிட கழகத்திலிருந்து பிரிந்துபோய், இன்று நாட்டில் ஒரு புதிய சக்தியாய் வளர்ந்திருக்கிறது.

காங்கிரசுக்கும், இதன் கொள்கைக்கும் அடிப்படையிலேயே வேற்றுமை உண்டு. மொழிவழி பிரிந்து தனிஅரசு செலுத்தும் தமிழ் நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்ற நான்கு ராஜ்யங்களும் இனவழியில் ஒரு கூட்டரசாக இருந்து வரவேண்டும்; யூனியன் சர்க்காருடன் தொடர்பை அறுத்துக் கொள்ள வேண்டும் என்னும் லட்சியம் உள்ள தி.மு. கழகமே எல்லா வகையிலும் காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாக இருக்கத் தகுதி வாய்ந்தது. லட்சிய அடிப்படையில் பெரியாரும் இதை ஆதரிக்கக் கடமைபட்டுள்ளார் என்று சொல்லத் தேவையில்லை.

ஏதேனும் சொந்தக் காரணத்தை முன்னிட்டு தி.மு. கழகத்தை அடுத்த தேர்தலில் ஆதரிக்க பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் விரும்பவில்லை, என்றால் தி. மு. கழகத்திற்கு எதிரிடையாகவாவது பிரசாரம் செய்யாமல் நடுநிலைமை வகிப்பதுதான் முறை. அப்படியில்லாது தி.மு.க. வை எதிர்க்க வேண்டுமென்பதற்காக காமராஜரை ஆதரிப்பதென்பது சரியானதுதானா என்பதை யோசித்துப் பார்க்கும்படி பெரியார் ஈ. வே. ரா. அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—சிங்கை 'தமிழ் முரசு' [25—11—56]

காதலுக்கு...

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

துன்பமே நீ என்னோடு கூடியிருக்கலாமே! தடை! தடை! எங்களைப் பிரிக்கும் தடை மதிலா—அகழியா—காடா—காளுறு—எது எங்களைப் பிரிக்க முடியும்? எங்களிடையே எந்தத் தடையும் இல்லை. அவர் என்னிடம் பொய் கூறியிருக்கிறார். அவர் தடை கூறும் காரணம் என்னவென்று தேடிப் பார்க்கிறேன். தெரியவில்லை. ஆனால், பெண்கள் ஆண்களைப் போல காதல் புரிய முடியாது — ஏனெனில், நினைத்த நேரத்தில், காதலித்தவரைத் தள்ளிவிட முடியாதே! என் இதயத்திலிருந்து அவர் உருவத்தை வெட்டியெடுத்து விட்டாலும், தெய்வத்தை தேடியோடும் உண்மை பக்தனைப் போல், உலகம் முழுவதும், காதல் கண்ணீர் விட்டபடி தேடிப் போகுமே, என் இதயம்!

காட்சி--20

[குயில் குரலாள் ஏழை எளியவர் கூட்டத்திற்கு உணவும், உடையும் தந்திடுகிறாள். அந்த நகை முகத்தான் வருகிறான். அவன் மனதிலே, இளவரசி குயில் குரலாள் எண்ணமே தென்றலாக வீசியது. ஏனெனில் மேட்டுக் குடியினராயினும், ஏழைகளிடம் பரிவும், பாசமும் காட்டுகிறாளே என்ற எண்ணத்தினாலேதான்!

ஏழையருக்கு, அவள் அன்னம், ஆடை வழங்கி முடித்தாள். நகை முகத்தான் அதுவரை நின்றான்.]

கு. கு: தங்களுக்கு வேண்டியது என்ன? உடையா, உணவா?

ந. மு: எனக்கு எதுவும் தேவையில்லை. இங்கு நான் உலக அதிசயங்களில் ஒன்றை பார்க்கிறேன்.

கு. கு: என்ன அது?

ந. மு: இரும்புப் பெட்டிக்கும் இருதயத்திற்கும் சம்பந்தமே இருக்காது என்பார்கள். இங்கு அவை இரண்டிற்கும் சம்பந்தம் மட்டுமல்ல, இணைபிரியாத உறவிருப்பதைப் பார்க்கிறேன்.

கு. கு: குறும்புக்காரர் நீங்கள்!

ந. மு: அதுமட்டுமல்ல; தீயும், நீரும் சேர்ந்திருப்பதைப் பார்க்க முடியுமா? அதையும் பார்க்கிறேன்.

கு. கு: தீயும், நீருமா?

ந. மு: தீயும், நீரும் அண்ணனும், தங்கையுமாக இருக்கும் விந்தையைப் பார்க்கிறேன்.

கு. கு: குறும்பர் மட்டுமல்ல; கூர்த்த மதிபடைத்தவர்—தாங்கள் யார்? எந்த ஊர்? என்ன பெயர்?

ந. மு: நான் இருப்பது வந்த ஊர். — விட்டுவந்த ஊர் சொந்த ஊர். பெயர் சிரிப்பரசன்—ஆனால் இன்றைய நிலைமைப்படி துன்பரசன்.

கு. கு: தங்கள் நிலைமை, துன்பம் நிறைந்ததா?

ந. மு: ஆம், இளவரசியாரே! நான் இங்கு இருந்து செய்ய வேண்டிய முக்கியமான வேலையிருக்கிறது—அது என் மனதை தினமும் வாட்டுகிறது!

கு. கு: காலம் அதிகமாகிறது—மற்றொரு முறை சந்திக்கிறேன்—அரசாங்க பொது நூலகத்திற்கு வாருங்களேன். அங்கேதான் நான் என் பொழுதைக் கழிப்பேன்.

ந. மு: ஆகட்டும் இளவரசி! புத்தகங்களில் என் நினைவைப் பதித்தாவது, காலத்தை பொன்னாகக் கழிக்கிறேன்.

காட்சி--21

[பொன்மேனியாள் வருந்திக் கொண்டிருக்கிறாள். அப்பொழுது மன்னன் புலிவலன் அங்கு வருகிறான்; வேட்டைக்கு புறப்படும் கோலத்தில் வந்திருக்கிறான். வேட்டைக்குப் புறப்படும் படை வரிசைகள் வெளியில் காத்திருக்கின்றன. வேட்டை நாய்கள் மட்டும் மன்னன் பின் வந்திருக்கின்றன.]

புலி: தேவி, புறப்படு! போவோம் வேட்டைக்கு — இன்று வேடிக்கையான விருந்து—விளையாட்டு — ஆட்டம் — பாடல் — கூத்து எல்லாம் காட்டில் நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பொ: என்னால் இன்று வர முடியாது. மன்னியுங்கள்.

புலி: ஏன்? என்ன உனக்கு? உடல் நலம் கெட்டுள்ளதா?

பொ: வர இயலவில்லை. வருந்துகிறேன்.

புலி: வர இயலவில்லை; வருந்துகிறாயா! ஏன் உன் முகம் வாடிய செந்தாமரையாகி விட்டது? இந்தக் கோலத்தில் உன்னை என் அருகில் வைத்து, எப்படி ஊர்வலம் வந்து, ஊரைக் கடப்பது?

பொ: என்னால் எழுந்திடவே முடியவில்லை என்கிறேன்—நீங்கள் உங்கள் பெருமைக்கு இழுக்கு வந்துவிட்டதைப் பற்றிப் பேசுகிறீர்கள். உங்கள் அழுக்கு மனதில், எனக்காக இரண்டொரு அன்பு வார்த்தைகள் கிடையாதா?

புலி: அன்புவார்த்தை எதிரிகளை வளைத்து, தந்திரமாக தகர்த்தெறிய வைத்திருக்கிறேன். நீ, என் கைக்குள் சிக்கிய புறா போல — உன்னிடம் அன்பு வார்த்தை பேசி, வீணாக்க வேண்டுவது ஏன்?

பொ: சரி, நான் புறப்படுகிறேன்.

புலி: இல்லை, இப்பொழுது என் மனதை மாற்றிக் கொண்டேன். சாளரத்தின் வழியே, நான் திரும்பிவரும் வழியில் விழிவைத்துக் காத்திரு—சரி புறப்படுகிறேன். யார் அங்கே? (கை தட்டுகிறான்)

பொய்யன்: மன்ன, வணக்கம்.

புலி: எங்கே ஆளவந்தான்?

பொய்: அவனைக் காணவே இல்லை.

புலி: சரி, அவன் வருவான் — தேவி, நான் செல்கிறேன்.

[மன்னன் புலிவலன், வேட்டைக்குப் புறப்பட்டுப் போகிறான். ராணி பொன்மேனியாள் தனித்து வாடுகிறாள்]

பொ: இன்று வானிலே மின்னும் மீன்கள் என்னை எதிர்த்துப் போராடத்தான் போகின்றன. ஆம், மன்னர் வேட்டையிலிருந்து திரும்பி வந்து மலர்ப் படுக்கையில் சாய்ந்து, நித்திரை தேவியை அணைத்தவுடன், நான் கட்டாரியைத் தழுவி, அதோடு என் வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டியதுதானா? ஆம், என் இதயம் அவ்வளவு கடினமானது. கட்டாரியின் கூர்முனையைத் தவிர வேறெதுவும் துளைக்க முடியாது உம். அம்புனை என் இதயத்தினுள் நுழைந்து, யார் பெயர் அங்கே மறைந்து கிடக்கிறது என்று தேடட்டும்! இன்று, சாவு, என்னையும், மன்னரையும் பிரித்துவிடும். அடிமையாக என்னை மணவிலங்கு பூட்டி வந்தார். அந்த விலங்கு உடைந்துவிடும்! வானத்தே மின்னல் தோன்றி மறைவது போல, என் உள்ளங் கவர்ந்தவரோ வந்தார் — பறிந்தார். புரியாத புதிராத—விளக்கமில்லாத கனவாக அவர் போய் விட்டார். நான் சாகிறேன். ஆனால் மன்னர் சாகமாட்டார்! ஏன் தெரியுமா? அவர் பாவங்களின் உறைவிடம். நல்லவர்கள்தான் சாகவேண்டிய காலத்திற்கு முன்னரே சாவர். மன்னரோ, செய்திருக்கும் பழி பாவங்களுக்கு, குஷ்டரோகம் பிடித்தல்லவா சாவார். அவர் உடனுறையும் அனைவரும் செத்தாலும் அவர் சாகமாட்டார் — உண்மையில் தீமைக்கு உள்ள சாகாத் தன்மை, நன்மைக்கு இல்லை! —நான் மட்டுமே தனியாக சாகப்போகிறேன் மரணமே! எனக்கு மணாளன் — இன்றிரவே, பஞ்சணையில் என்னை இறுகத் தழுவி இன்புறுவான். சமாதிதான், என் இரகசிய இன்பம் நுகரும் அறை. உலகமே ஒரு சுடுகாடு—நாங்கள் இருவருமே பிணம் மூடும் துணியைப் போல, எலும்புக் கூடுகளை மூடியபடி இப்பொழுது உலவுகிறோம்.

[இந்த நேரத்தில், பழிதீர்த்தான், உடல் முழுவதும் கருப்புடை யணிந்து முகத்தை மூடிக்கொண்டு சென்றான். அரசியைக் காண்கிறான்]

ப: எங்கு தேடியும் ஆளவந்தானைக் காணவில்லையே — எங்கே சென்றான்?

பொ: (கோபமாக) என் காதலனைக் கவர்ந்து சென்ற கள்வன் நீதான்.

ப: (சிரித்தபடி) என்ன? அவன் உன்னை விட்டுப் பிரிந்து சென்றானா?

பொ: (ஆத்திரத்தோடு) விளையாடாதே — உனக்கு எல்லாம் தெரியும்—என் காதலரை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால், உன்னைக் கண்ட துண்டமாக வெட்டுவேன். நாறு நாறாகப் பிய்த்து நாய்க்கும் கழுகுக்கும் விருந்து வைப்பேன்—நடுக் காட்டில் சென்று சிங்கத்திடம் சிக்கினால்கூட உனக்கு ஆபத்தில்லை. என்னிடம் சிக்கிவிட்ட உனக்கு பேராபத்து!

★ (தொடரும்) ★

தத்துவ எழுத்தாளர்!

பி. சி. கணேசன், பி.எஸ்ஸி., பி.டி.

திருவாளர் இச்சை மூர்த்தி ஒரு சிறந்த சிறு கதை எழுத்தாளர் என்று பெயர் பெற்றவர். ஒரு காலத்தில் அவருடைய கதைகள் இல்லாத பத்திரிகைகளே கிடையாது; இச்சை மூர்த்தியின் கதை என்றாலே ஒரு தனி 'மவுசு' இருந்தது! அவருக்கென்று ரசிகர் கூட்டம் ஒன்று தனியாக இருந்தது. அவர் கதை முதல் வாரம் வெளி வர வேண்டியதுதான்; மறுவாரமே பாராட்டுக் கடிதங்கள் மலை மலையாகவந்து குவிந்து விடும்.

இத்தனைக்கும் அவர் 'பாமரர்'களுக்காகக் கதை எழுதியதேயில்லை; ஒவ்வொரு சிறு கதையும் ஒரு 'தத்துவத்தை' அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டது பலர் படிப்பார்கள்; ஆனால் சிலருக்குத்தான் அதில் ஒளிந்திருக்கும் தத்துவம் பிடிபடும். அவர்கள் அதை எண்ணி எண்ணி மகிழ்வார்கள். யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று பிறர் அறிய வேண்டும் என்ற ஆவலில் அதை விமர்சிப்பார்கள். விமர்சனமும் ஒரு 'தத்துவ விளக்கமாக' அமைந்து விடும்!

"இச்சை மூர்த்தி இந்தமாத 'மலை மகளில்' எழுதியுள்ள கதையைப் படித்தீர்களா?" என்பார் ஒரு ரசிகர்.

"எதைச் சொல்லுகிறீர்கள்? 'அபிஷேக பலன்' என்கிற கதையைத்தானே? பிரமாதம் போங்கள்! தெய்வப் பிரசாதத்தை எவ்வளவு அனாயாசமாக பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட எழுதியிருக்கிறார்! அபிஷேக ஆராதனைக்கு என்ன அற்புதமான விளக்கம்—எல்லாம் தத்துவ ரீதியில்தான். என்னமோ போங்கள்; நம் இச்சை மூர்த்தி வாணியின் வரப்பிரசாதம்தான்!"—இப்படி முத்தாய்ப்பு வைப்பார் அடுத்த ரசிகர்.

எல்லோரும் "தத்துவம்—தத்துவம்" என்று ஏதேதோ சொன்னார்கள். என்ன தத்துவம் என்று எவருமே சொல்லவில்லை! இச்சை மூர்த்தியும் என்னவெல்லாமோ எழுதினார். அவர் எழுதிய எதிலும், தத்துவத்தின் 'சாயலை' விமர்சகர்கள் காணத் தவறவில்லை.

இச்சைமூர்த்தி சிறுகதை எழுத்தாளராகத் தொடங்கி, சுலபமாக தத்துவ ஞானியே ஆகி விட்டார் — இல்லை, ஆக்கப்பட்டார்! ஒரு ரசிகர் பட்டாளம், ஒரு கதாசிரியனை தத்துவ ஞானியாக்கும் ஆற்றல் பெற்றது என்ற உண்மையை இலக்கிய உலகம் நிதர்சனமாகக் கண்டது.

* * *

ஆனால் சில ஆண்டுகளாக இச்சை மூர்த்தியின் கதை எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை. அவர் எழுதாவிட்டால் சிறுகதை உலகமே நிலைகுலைந்த வானமாகி விடும்— என்று பேசியும் எழுதியும் வந்த ரசிகர் கூட்டம்கூட, 'ஏனோ தானோ' வென்று இருந்தது. ரசிகர் உலகம் அவருடைய பெயரையே மறந்து விட்டது.

தீபாவளிக்கு ஒரு மாதம் இருந்தது! இச்சை மூர்த்தியின் மனைவியார் அந்த வாரத்திய 'பரதேச மித்திரன்' இதழைப் புரட்டிக் கொண்டிருந்தார். இச்சை மூர்த்தி சாய்வு நாற்காலியில் படுத்தபடி,

'பாகவதம்' படித்துக் கொண்டிருந்தார்.

"உங்களைத்தானே! 'பரதேசமித்திரன்' தீபாவளி மலரில் யார் யாரோ எழுதுகிறார்கள்! நீங்கள் கதை எழுதி எத்தனை வருஷங்களாகிவிட்டன. மலருக்குத்தான் ஒரு கதை எழுதி அனுப்புங்களேன்! நீங்கள் எழுதாவிட்டாலும், ஒவ்வொரு வருஷமும் அவர்கள் மட்டும் உங்களைக் கதை கேட்கத் தவறுவதில்லை..."

இச்சை மூர்த்தி 'கட கட' வென்று சிரித்தார். "போடி, பைத்தியக்காரி! மலரில் எழுதுகின்றவர்களின் பட்டியலைப் பார்த்தாயா? நேற்று முளைத்த பயல்களெல்லாம் கதை எழுதக் கிளம்பிவிட்டான்கள். உப்புமில்லை; சப்புமில்லை.....அந்தக் காலத்தில்....அடடா... அதுதான் தமிழ்ச் சிறுகதையின் பொற்காலம்! அ. ப. ரா., மல்லப்பா, சோமையா என்ன, ம. ஜ. ர., ச. லா. பஞ்சாமிர்தம் என்ன, அந்த சிறு கதை மன்னர்களெல்லாம் — நான் உள்பட—அன்று தமிழில் சிறுகதை இலக்கியத்திற்குத் துவஜாரோகணமே நடத்திவைத்தோம். இப்பொழுது என்னடா வென்றால், மறுமலர்ச்சிப் போர்வையில் எவன் எவனோ, பேத்தறதெல்லாம் சிறுகதை ஆயிடுது! ஹூம், தமிழுக்கு க்ஷீணதசை; இதில் போய் நானும் என் அந்தஸ்தை நஷ்டப்படுத்திக்கணுமா?" – இச்சை மூர்த்தி மனைவியிடம் ஒரு 'ரெவ்யூ' கொடுத்தார்.

"அட, அதெல்லாம் நேக்குத் தெரியாதா என்ன? உங்கள் பார்யாள் ஒரு 'கிரிடிக்' என்பதை மறந்துவிட்டேன் போலிருக்கு!"—அம்மையார் இச்சை மூர்த்தியின் மனைவி என்பதை நிரூபித்தார்.

"அதோடு பாரு, நல்ல ரசிகாளும் இருந்தா! நம்ம ரா. வ., இஞ்சேரி பரமேஸ்வரன், ம. கா. சுப்ரமண்யம் — இவாள்ளாம், எழுத்தாளர் மட்டுமல்ல; தரம் அறிந்த விமர்சகாளும்கூட. இப்போ, தமிழே நாஸ்திகமா யிடுத்து..."

"அது போகட்டும்ணா! 'பரதேசமித்திரன்' நம்மிதுதானே? அதிலே எழுதுங்களேன்"—சகதர்மினி விடவில்லை.

மனைவியின் தொந்தரவு பொறுக்க மாட்டாமல் இச்சை மூர்த்தி பேனாவைக் கையில் எடுத்து தத்துவத்தை சாரமாக்கி கடைசிச் சிறுகதை (அவரைப் பொறுத்த மட்டில்தான்) ஒன்று எழுதி, 'பரதேச மித்திரன்' தீபாவளி மலருக்கு அனுப்பிவிட்டார்.

* * *

தீபாவளி மலர் வெளி வந்தது!

'பரதேசமித்திரன்' ஆசிரியர் பாடு திண்டாட்டமாகி விட்டது.

"இச்சை மூர்த்தியோடு சிறுகதை உலகம் செத்துவிட்டதாக, இச்சை மூர்த்தி எழுதியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். 'சிறு கதை' எந்தத் தனி நபருடைய பிறவிச் சொத்தும் அல்ல; இச்சை மூர்த்தி போன்றவர்கள் குழப்பி வைத்திருந்த குட்டையில் 'தூறு' வாறி, தூய நீர் பாய்ச்சும் ஆற்றல் படைத்த எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்!" என்ற கருத்துப்பட ஏராளமான கடிதங்கள் ஆசிரியரின் மேஜைமீது குவிந்து கிடந்தன.

அத்தனை கடிதங்களையும் ஆசிரியர் அப்படியே இச்சை மூர்த்திக்கு அனுப்பிவிட்டார்.

"பார்த்தாயா, ரசிகர் உலகத்தை! 'தரம்' குறைந்துவிட்டது என்றால் கேட்கிறாயா?"—மனைவியின்மீது சீறி விழுந்தார் இச்சை மூர்த்தி.

ரசிகர்களின் கடிதங்களைப் படித்த அம்மையாரின் முகத்தில் அசடு வழிந்தது! இச்சை மூர்த்தி கடிதங்களை ஆவேசத்தோடு கிழித்துப் போட்டு விட்டு, அன்று வந்த தினசரியைப் பிரித்தார்.

அறிஞர் அண்ணாவின் சிறுகதையான 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' படமாக்கப்படும் விளம்பரம் அவரைப் பார்த்து சிரித்தது! ●

வடஆற்காடு மாவட்டத்தில் தேர்தல் நிதி நாடகங்கள்

அறிஞர் அண்ணா

அவர்களும்

கழகத் தோழர்களும்

நடிக்கும்

சந்திரோதயம்

குடியேற்றத்தில்:

ஒரே நாளில் இரண்டு நாடகங்கள்

15-12-56 சனி மாலை 6-மணிக்கு,

இரவு 10-மணிக்கு

★

திருப்பத்தூரில்:

16-12-56 ஞாயிறு

இரவு 10-மணிக்கு

★

கழகத் தோழர்களே!

ஆதரவாளர்களே!

கழகம் வெற்றி முரசு கொட்ட

கடமையாற்றத் திரண்டு வாரீர்!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பொழுது போக்கு

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

'மற்கலைராவும்' 'எந்த வேடு கோலம்' தான் பாடினர். மதத்தில் வடமொழி ஆதிக்கம், கல்வியில் நிர்வாகத்தில் ஆங்கில—இந்தி கூட்டு ஆதிக்கம், இசையில் தெலுங்கு ஆதிக்கம்......எங்கே தமிழன்? இமயத்தில் புலிக்கொடி பொறித்தவன் எங்கே? இகழ்ந்தவர்களை எருதுகளாக்கிக் கல் சுமக்க வைத்த காவலனின் பரம்பரை எங்கே? அலைகளைக் கட்டியாண்டு உலகெங்கும் தமிழ்க் கலை வளர்த்த மூவேந்தர் பரம்பரை எங்கே? முத்தமிழில் இடைத் தமிழாக இசைத் தமிழை வைத்துப் போற்றிய தமிழ்க் கலைஞர்கள் எங்கே? பாட்டும் கூத்தும் வாழ்க்கைப் பாங்காக அமைந்த கலைச் செல்வி மாதவிகள் இந்த நாட்டில் அருகி விட்டார்களா? பாணரும் விறலியரும் பாங்குடன் இசை வளர்த்த மொழியில் — இந்தப் 'பரப்பிரம்மங்கள்' நஞ்சு கலப்பதா?

மொழிவழி மாநிலம் அமையாதது கண்டு அங்கே ஆர்த்தெழுந்தது சிவாஜியின் பரம்பரை. இங்கே நிலம் அமைந்தும், நிலத்திற்குரிய பெயர் நிலைக்காமல், கலை கொலை செய்யப்படும் அவலநிலை கண்டும் செங்குட்டுவன் வழிவந்தோர் கெசமறியாடுகள் ஆகிவிடலாமா? ஆர். கே. சண்முகமும் ராஜா சர் அண்ணாமலையும் ஆரம்பித்த தமிழிசை இயக்கம் அழிந்துவிடக் கூடாது.

தமிழ்ப் பாட்டுப் பாடத் தெரியாதவனுக்கு, தமிழகத்தில் வேலை இல்லை என்ற சூழ்நிலை உருவாக வேண்டும். தமிழ் நாட்டு ரேடியோ நிலையங்கள் தமிழுக்குத் தொண்டு செய்யாவிட்டாலும் துரோகம் செய்யாமலாவது இருக்கட்டும்.

தமிழ் இசை விழா ஆவன செய்யட்டும்! அதற்கு மு. வ. அவர்களின் தலைமையுரை வழி கோலட்டும்!

★

கீழ்க்கண்ட ஊர்களுக்கு "முத்தாரம்" (மாத வெளியீடு) விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை:

1. மணக்கால் (தஞ்சை ஜில்லா)
2. சேந்த மங்கலம் (சேலம் ஜில்லா)
3. வாட்டர்பால்ஸ் புதுக்காடு (பொள்ளாச்சி)
4. வாலாஜாபேட் (வட ஆற்காடு ஜில்லா)
5. வண்டிப்பெரியார் (திருவனந்தபுரம்—கொச்சி)

விபரங்களுக்கு:—
"முத்தாரம்"
தபால் பெட்டி எண் 712.
சென்னை—6.

இந்தி ஒரு மந்தி அலங்காரி!

"மராட்டிய மண்டலம் சிதறியதோடு சிப்பாய்க் கலகமும் அடக்கப்பட்ட பிறகு உள்ள காலத்தில் இந்துஸ்தானின் இலக்கிய வளம் எப்படியிருந்ததெனக் காண்போம். இந்தக் காலத்தில்தான் வட இந்தியாவில் அச்சகங்கள் உருவாகின. புது முறைப் பள்ளிகளும் அங்குமிங்கும் தலைகாட்டலாயின. இப்பொழுதுதான் ஐரோப்பியர்களால் "இந்தி" என்று அழைக்கப்பட்ட மொழி பிறந்தது. அது ஒரு காட்டு மொழியாகும். 1803-ல் கில்கிரைய்ட் என்பாரின் போதனைப்படி வல்லுரஜீலால் பிரேம் சாகர் எனும் நூலை எழுதலானார். அந்நூலில் அவர் அக்பரின் ஆஸ்தான புலவர்கள் கையாண்ட உருது மொழி நடையும் முச்சந்திகளில் கூடும் சகல மக்களின் பேச்சு நடையும் கலந்து எழுத முயன்றார். இந்நூலில் அரேபிய அல்லது பாரசீக மொழியில் வரும் பெயர்களையும் இந்தி மயமாக்கினார். இதனால் புதிய ஒரு கதம்பமாக இருந்தது அந்நூல். இப்படி உருவானதுதான் இந்தி! இதை ஐரோப்பியர்கள் இந்தி என்று அழைக்கலானார்கள். படிப்படியாக இப்படியமைந்த மொழியில் நூல்கள் ஏற்படலாயின. யாவும் உரை நடைக் காவியங்களே ஒழிய இம்மொழியில் சிறந்த கவிதை நூல்களை ஆக்க முடியவில்லை. மிக மிகப் பெரியவர்கள் எல்லாம் கவிதைகள் புனைய முயன்றனர்: எனினும் இயலவில்லை. ஆகவே வட இந்தியாவில் இப்போதுள்ள இலக்கியம்—ஆங்காங்குள்ள மொழிகளில் எழுதப்படும், கவிதைகள் தான் பீகார், பாய்ஸ்வரி, பிராஜ் முதலிய மொழிகளில் கவிதைகளிருக்கும்; ஆனால் உரைநடை நூற்களோ இந்தியிலிருக்கும்.

இந்த இந்தியைத்தான் பல்லாயிரம் ஆண்டுகளாக இயங்கி வரும் மொழி வளம் கொண்ட நம் மீது சுமத்துகின்றனர். அதற்கு தேசிய போதையிலிருப்போர் இந்திக்கு ஆலவட்டம் பிடிக்கின்றனர்.

ஆதரவாளர்கள் கூறும் காரணங்களில் ஒன்று பெரும்பான்மையோர் பேசும்மொழி என்பதாகும். இதையும் ஆராய்ந்து பார்த்தால் அதிலும் உண்மை இல்லை. ஐக்கிய மாகாணத்தில் பேசப்படும் இந்தியும் பிஹாரில் பேசப்படும் இந்தியும் எழுத்துருவத்தில் ஒன்றே தவிர பேச்சு வழக்கில் ஒருவருக்கொருவர் புரியாது. உத்திரப் பிரதேச இந்தி வேறுவிதமாய் இருக்கும். நாம் பொதுப்படையாக இந்தி என்கிறோமே தவிர வெவ்வேறு பெயர்கள் கொண்டன அம்மொழிகள். பீஹாரி பாய்ஸ்வரி, பிராஜ் என்று வெவ்வேறு பெயர்களால் அம்மொழிகள் அழைக்கப்படுகின்றன. இந்தி என்ற மொழி பேசும் மக்களை மட்டும் எடுத்துக் கொண்டால் — வங்காளி பேசுவோர்களை விட, மராட்டி பேசுவோர்களைவிட, தெலுங்கு தமிழ் பேசுவோர்களை விடக் குறைவானவர்களே இந்தி பேசுவோர். மூன்று நான்கு மொழிகள் பேசும் மக்களை ஒன்று சேர்த்து பெரும்பான்மையோர் பேசும்மொழி என்று இந்தி ஆதிக்கக்காரர்களால் கூறப்படுகிறது. அப்படிச் சேர்த்துப் பார்த்தாலும் கூட, 12 கோடிப் பேரே இந்தி பேசுவோர்! இந்தியப் பேரரசில், தற்போதிருக்கும் 38 கோடி மக்களில் பாக்கி 26 கோடி பேர் வேற்று மொழிக்காரர்கள். இதைத் தோழர்கள் தெரிந்திருந்தால் 10 பேர் நலத்தில் 9 பேர் நலத்தைப் பொசுக்கும் ஜனநாயகம் பேசியிருக்க மாட்டார்கள். மோரிலிருந்து வெண்ணையும் கடைந்தெடுக்க மாட்டார்கள்.

—"தந்தி" இரங்கூன்.

இசையுலக ஜோதிக்கு அறிவுலக ஜோதி அண்ணா மாநில மாநாட்டில் மாலையிட்ட காட்சி.

சென்னை
50-வது வட்ட தி. மு. க.
2-வது ஆண்டுவிழா

15—12—56 சனி மாலை 6 மணிக்கு சபாலி டாக்கீஸ் எதிரில் உள்ள திடலில் நடைபெறும்.

தலைவர்:
இராம. வெள்ளையன்

பேசுவோர்:
மு. கருணாநிதி

இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்

நடிகமணி
டி. வி. நாராயணசாமி

சற்குணம்.

● 4-ம் பக்கத் தொடர்ச்சி

சாலைகளும் பெற்று வடநாட்டு மாந்தர் வளப்பத்தை ஏகபோக உரிமையாக்கிக் கொண்டனர்.

தென்னகமோ தேம்பி அழுகிறது. திக்கற்ற பாலகனைப் போல் சூம்பிய வயிற்றினைச் சுமந்து கொண்டு வேம்பு தானா எங்கள் வாழ்வு?—என அம்பு தைத்த மான் போலக் கதறியழுகிறது.

★ ஹங்கேரியிலே சமநிலையல்லாத பொருளாதாரம் புரட்சியிலே முடிந்தது!

இங்கு மட்டும் என்னவாம்? சரிநிலையில்லாத ஓர் வஞ்சகப் பொருளாதாரத் திட்டம் தென்னகத்தை ஒரு 'ஹங்கேரி'யாக மாற்றாமலா இருக்கப் போகிறது!

'ஊருக்கு உதவு!'

சிங்காரம் ஓடிக்கொண்டிருந்தான். ஒலிம்பிக் பந்தய ஆட்டக்காரனின் ஓட்டத்தில் காணப்படாத வேகம் அவன் ஓடும்போது தென்பட்டது. அவன் ஓடினான்; உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் தன் தாயை நோக்கி கணத்திற்குக் கணம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் சாவை விரட்ட ஓடினான்!

யமதர்மன் கையிலே பாசக் கயிறு இருக்கும் என்பார்கள். அதனால்தான் உயிர் பறிப்பான் அந்தக் 'கொலைக் கடவுள்' என்றும் பிதற்றுவார்கள். அப்படிக் கயிறு தூக்கிக் கடவுள் வந்தாலும், அவரை விரட்டியடிக்க சிங்காரத்தின் கையிலே டாக்டர் தந்த மருந்து இருந்தது.

"சிங்காரம்! உன் அம்மாவுக்கு வந்திருக்கிறது சாதாரண வியாதியில்லை தம்பி! இந்த நோய் வந்தவுங்க நூற்றுக்கு பத்து பேரு பிழைக்கிறதே கஷ்டமப்பா!......இருந்தாலும் இந்த பாரு, இந்த மருந்து ரொம்ப விலையுயர்ந்தது— உடனே கொண்டுபோயி அம்மாவுக்குக் கொடு. காலம் தாழ்த்தாதே! அப்புறம் என் மேல் குறை சொல்லாதே!..." என்று சொன்னார் டாக்டர்,

இந்த நினைவு சிங்காரத்திற்கு வந்ததும் இன்னும் வேகமாக ஓட ஆரம்பித்தான். பாவம், பொல்லாத பயம் அவனுக்கு! பயப்படாமல் என்ன செய்வான்? பெற்ற அன்னை— அவளைத் தவிர அவனுக்கும் வேறுயாருமில்லை. "டாக்டர்... டாக்டர்! என் அம்மா செத்துப் போயிட மாட்டாங்களே, டாக்டர்?" என்று எத்தனை முறை திருப்பித் திருப்பிக் கேட்டிருப்பான்!

"இப்படிக் கேட்டுக் கொண்டே இருக்காதே தம்பி! நாழியாகிறது பார்; எதையும் காலத்தோடு செய்யவேண்டும்! உன் தாமதத்தால் ஒரு வேளை, தவறு நேர்ந்துவிடப்போகிறது! ஓடு...சீக்கிரம் ஓடு!....."என்று விரட்டினாரே டாக்டர்!

மருந்துப் புட்டியை இறுகப் பிடித்துக்கொண்டு, தெருவை விட்டு குறுக்கு வழியே புகுந்தான் சிங்காரம். வயல் வரப்பு என்று பாராது—கல் முள் என்று கவனியாது ஓடினான். 'ஓ' வென்று வீசிய பெருங் காற்று, "மகனே! ஓடி வந்து என் மரணத்தை விரட்டடா!" என்று தன் அன்னையின் குரல் அலறித் தவிப்பதைப்போல அவனுக்குக் கேட்டது!

அப்போது.............."ஐயோ! மகனே!' என்றொரு பயங்கர அலறல் எங்கிருந்தோ எழும்பியது.

சிங்காரம் திடுக்கிட்டான். கதறுவது யார்? அவனது அன்னையின் அவலக் குரல் தானா அது? பிரமையா? பேதலித்த மனத்தின் எதிரொலியா? சிங்காரம் மீண்டும் ஓடினான்.

"ஐயையோ! என் செல்வமே! போறியாடா, என்னைப் பெத்தவனே!"

—இது பிரமையல்ல; பிரமையல்ல; பெற்றவளின் நெஞ்சத்து ஆழத்திலிருந்து எழும்பும் சோகப் பெரும் புலம்பல்தான்!

சிங்காரம் திடுக்கிட்டான். சுற்றுமுற்றும் பார்த்தான். தூரத்திலே ஒரு காட்சியைக் கண்டான். ஒரு பெண் அங்கே ஓடிக் கொண்டிருந்த ஆற்றங்கரையிலே தலைவிரி கோலமாக நின்று கொண்டிருந்தாள். சிங்காரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தத் திசை நோக்கி ஓடினான்.

"ஐயையோ! இங்கே யாரும் இல்லையா? என் மகன் போறானே! போறானே!"— அந்தத் தாய் தான் மீண்டும் அலறினாள்.

சிங்காரம் இதற்குள் ஆற்றங் கரையை அடைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி ...? "ஐயோ" என்று அவனே அலறி விட்டான். ஆற்று வெள்ளம் ஒரு அன்புத் தம்பியை தன் பலங் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டு சென்றது. அதைக் கண்டுதான் அந்தத் தாய் அப்படி அலறிக் கொண்டிருந்தாள்.

சிங்காரத்தைக் கண்டுவிட்டதும் அந்த அம்மா, "ஐயோ தம்பீ! தம்பீ! காப்பாத்து தம்பி, என் கண்மணியை!..." என்று கெஞ்சிக் கொண்டே கத்தினாள்; கத்திக் கொண்டே கெஞ்சினாள்!

சிங்காரம் கணநேரம் திடுக்கிட்டுவிட்டான். என்ன; அவன் காப்பாற்றுவதா? ஆற்று நீரிலே குதித்து — வெள்ளத்தோடு போராடி—அந்தப் பச்சிளம் பாலகனைக் காப்பாற்றுவதா? அதற்கு ஏது நேரம்?

"என்ன தம்பி யோசிக்கிறே? விளையாட வந்தவனை ஆற்றோடு அனுப்பிவிடச் சொல்றியா தம்பீ? உனக்கு இரக்கம் இல்லையா? உன் காலிலே விழுகிறேன் தம்பி!"—சிங்காரத்தின் உடம்பைப் பிடித்து உலுக்கினாள். அந்த நீந்தத் தெரியாத அன்னை!

"ஐயோ!" என்று அலற வேண்டும் போலிருந்தது சிங்காரத்துக்கு!

அங்கே உயிருக்கு மன்றாடுகிறாள் தாய்—இங்கோ மகனின் உயிர் பிச்சை கேட்டுக் காலடியில் கிடக்கிறாள் ஒரு தாய்! அவன் என்ன செய்வான்?

கையையும் காலையும் அடித்துக் கொண்டு—மூழ்கி மூழ்கி எழுந்து ஆற்றோடு போய்க் கொண்டிருந்தான் அந்தச் சிசு!

சிங்காரத்தால் அந்தக் காட்சியை சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. அந்தத் தாயின் அலறலையும் அவனால் தாங்க முடியவில்லை. ஆனால்... ஆனால் ...அதனால்...அவனைக் காப்பாற்றத் துணிந்தால்—தாமதம் ஏற்பட்டுவிடுமே! அந்தத் தாமதம் அவன் அன்னையின் உயிருக்கு...? "தாமதத்தால் தவறு நேர்ந்துவிடும் சிங்காரம்...ஓடு ...சீக்கிரம் ஓடு!..."—என்று டாக்டர் சொன்னாரே!

"ஐயையோ!...நான் என்ன செய்வேன்? — அந்தத் தாயின் புலம்பல், வெள்ள ஓசையை மிஞ்சி—பெரும் காற்றின் சீற்றத்தையும் மிஞ்சி எழும்பியது!

சிங்காரம் என்ன செய்வான்? என்ன நினைத்தானோ என்னவோ—மருந்துப் பாட்டிலை கீழே வைத்தான். மறு கணம் 'தொபீர்' என்று ஆற்றில் குதித்தான்.

சிங்காரத்தின் தாய் என்ன ஆகியிருப்பாள்; தாமதம் அவளது உயிரைக் குடித்து விட்டிருக்குமா? இந்த இக்கட்டான நேரத்தில் சிங்காரம் ஆற்று நீரோடு போராடியதை—அந்த அன்புக் குழந்தையை கரை சேர்த்ததை — அதைக் கண்ட அந்த ஏழைத் தாய் களிப்பால் கூத்தாடியதை எல்லாம் இங்கு விவரித்துக் கொண்டா இருப்பது?

"தம்பீ! உன்னைச் சாகும் வரை மறக்க மாட்டேன்!" என்ற அந்தத் தாயின் குரலைக்கூட காதில் வாங்காமல் —ஈரத் துணியுடன்—குளிரால் நடுங்கும் உடலுடன் — மருந்துப் புட்டியை எடுத்துக் கொண்டு ஓடினான் சிங்காரம்!

ஆனால்......அவனது மனக் கண்களின் முன் ஒரு பயங்கரமான காட்சி உருவாகி நின்றது! அதோ...அவன் அன்னை கிடக்கிறாள், உயிரற்ற பிணமாக! அவன் கொண்டு சென்ற மருந்து வீசப்பட்டுக் கிடக்கிறது தேவையற்ற பொருளாக! "பெற்றவளையே கொன்றுவிட்டாயே பாவி!........" என்று ஊர் — உறவுமுறை — உலகம் எல்லாம் அவனைத் தூற்றுகிறது! "சீக்கிரம் ஓடு...ஓடு... என்று அடித்துக் கொண்டேனே! கேட்டாயா? இப்போ என்ன செய்யப் போகிறாய்? தாயில்லா தறுதலையாகத் திரி......தீயவனே!" என்று எங்கிருந்தோ கணை தொடுத்தது டாக்டரின் குரல்!

சிங்காரத்தால் அதற்குமேல் நினைக்க முடியவில்லை.

வீடு நெருங்கிவிட்டது. தெரு முனையிலிருந்தபடியே வீட்டை கவனித்தான். வீட்டு வாசலில் பெருங் கூட்டமே நின்றது. சிங்காரம் 'அம்மாவை இழந்துவிட்டோம்' என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

எல்லோரும் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள். "ஐயோ, அம்மா!" என்று கதறிக்கொண்டே வீட்டிற்குள் ஓடினான் சிங்காரம்.

அங்கே.........

டாக்டர் நின்றுகொண்டிருந்தார். சிங்காரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. 'டாக்டர் சார்! தாமதமாயிட்டு சார்!... என் அம்மா......"

டாக்டர் இடைமறித்தார். "உன் தாமதம் நல்லதிற்குத்தான் தம்பீ! நான் உனக்குக் கொடுத்தது இந்த வியாதிக்கான மருந்தல்ல; விஷம்!....... விஷம்!.........டாக்டர்களுக்கு இருக்கக் கூடாத—— ஆனால் எனக்கிருந்த பதட்டத்தால் இந்த மாபெரும் தவறுசெய்துவிட்டேன். உடனே தேவையான மருந்துடன் காரில் புறப்பட்டு வேகமாக வந்தேன். நல்ல வேளை; நீ இதுவரையில் வரவில்லை. நீ ஒருக்கால் வந்திருந்து நான் தந்த மருந்தையும் கொடுத்திருந்தால் உன் அன்னையை நான் கொன்றவனாகியிருப்பேன்!....." என்றார் டாக்டர்!

"அம்மா பிழைத்துவிட்டார்களா, டாக்டர்?" என்று சிங்காரத்தின் வியப்புக் குரலைத் தொடர்ந்து— 'வாடா, என் கண்ணே!" என்ற அம்மாவின் அன்புக் குரல் கேட்டது!

ஓ. எம். சுப்பிரமணியன்

நாயன வேந்தர் நமைப் பிரிந்தார்!

குற்றாலம் அருவி திடீரென்று ஓய்ந்துவிட்டது! குளிர் பொழியும் இன்பத் தென்றல் நின்று விட்டது! சிந்துபாடும் சிற்றாறு வற்றி விட்டது! ஆமாம்: நாயனப் பெரும் புலவர் ராஜரத்தினம் மறைந்து விட்டார்!

தமிழகத்துச் சிறப்புக்குத் தனிப்பெரும் எடுத்துக் காட்டாக புகழில் இமயமாக விளங்கிய இசையுலக ஒளிவிளக்கு சாவுப் புயலால் அணைந்து விட்டது! அம்மவோ!... எழுதவே கை யோடவில்லை; அண்ணல் ராஜரத்தினத்தின் எதிர்பாராத முடிவு பற்றி!

எத்தனையோ பேர் சாகிறார்கள்- எச்சத்தால் தக்கார், தகவிலார் என்று கணக்கிடப்படும் கணக்கர்றோரை நீள் வையம் தன்னகத்தேக் கல்லறையாகக் கண்டிருக்கிறது. அவர்களில் சிலரின் பிரிவால் கண்களைக் குளமாக்கிக் கொண்டு நாடு தேம்பி நிற்கிறது என்றால் அத்தகையோர் செத்தும் சாகாத முத்துக்களே யாவர்!

அம் முத்துக்களில் ஒரு நன்முத்தே நமது நாயனவேந்தர்!

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இடு காட்டில் இறுதி வணக்கத்தின்போது குறிப்பிட்டது போல......நடிகர்களை அகில உலகத்திலும் காணலாம்—ஓவிய நிபுணர்களை அகில உலகிலும் காணலாம் — சிற்பிகளைக் காணலாம்—இசை வாணர்களைக் காணலாம்—பாப்புனைவோர்—பாணர்—எல்லாத் துறை வல்லுநர்களையும் எங்கும் காணலாம்—ஆனால் நாயனக் கலைஞர்களை தென்னகம் தவிர வேறெங்கும் காணமுடியாது! தமிழகத்துக்குரிய பெரும் செல்வங்களில் நாயனக் கலைச் செல்வமும் ஒன்று! பிற நாட்டாரோ— பிற இனத்தாரோ பின்பற்ற முனையாத - அல்லது முடியாத — ஒப்பற்ற கருவூலம்! அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் தலைமை வகித்த தகைமையாளர் மறைந்த மாணிக்கம் ராஜரத்தினம்!

அவர் இங்கே இப்போது நம்மிடம்!...நம்மிடமிருந்து பல நல்லோர் பிரிக்கப்பட்டது போலவே இவரும் பிரிக்கப்பட்டு விட்டார்; காலத்தின் வேகத்தால்!

ராஜரத்தினம்—இசை வல்லுநர் மட்டுமல்ல; நாயனத்தில் மன்னர் மட்டுமல்ல; ஒரு தன்மான வீரர்! தலை சாய்க்கா சிங்கம்! வணங்கா முடிகொண்ட வண்ணத் தமிழ்க் கலைஞன்!

'சேவகம் புரியச் செல்கிறோம்' எனச் செப்பிய நாயனக்காரர்களை சுய மரியாதைப் பாதைக்கு அழைத்து ... சேவகத்தைக் கச்சேரியென்று மாற்றிய புரட்சிக்காரர்!

செருப்பணிதல் — சிமோன்களைக் காணில் மேல் துணி, சட்டை அணிதல் கூடாதென்ற இழிப்போக்கை இடித்துரைத்து அனைவரும் மனிதரென்ற உணர்ச்சிக்கு வித்திட்ட சுயமரியாதைச் சுடர்!

இசை வேளாளர் குலத்துக்கும், இயல் இசை கூத்தென்று முத்தமிழ் முழங்குகின்ற தாயகமாம் தமிழகத்துக்கும்—ஈடு செய்ய இயலாத மாபெரும் இழப்பு! மாபெரும் இழப்பு!! உண்மையிலேயே ஈடு செய்ய முடியாத இழப்பு!!

சென்னையிலே அவர் உடலம் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் தென்னகமே திரண்டிருந்தது போல திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் முன்னணி வீரர்களும் திரண்டிருந்தனர்; அறிஞர் அண்ணாவின் தலைமையிலே! கலையுலகமே வந்ததுபோல் அத்தனை தமிழ் நடிகர்களும் வந்திருந்தனர்; கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் தலைமையிலே!

நாயன வேந்தர் தனக்காகவோ தன் குடும்பத்துக்காகவோ சேர்த்துவைத்தது புகழ் மட்டுமே எனக் கூறி கண்ணீர் வடித்தனர் வந்தோர் அனைவரும்! அவர் சாவதற்கு முன் தினம் நடிகவேள் ராதா நிதி நாடகமொன்று நடத்தி, பலரிடம் நிதி வசூலித்து அவரிடம் 2500 ரூபாய் கொண்ட பண முடிப்பு கொடுக்க முன் வந்தார். அதைப் பெறுவதற்குப் புறப்பட்ட புலவர் அங்கு போகாமலே வீழ்ந்து விட்டார், சாவுப் படுக்கையில்!

கண்ணீர் மல்கி நிற்கும் அவரது குடும்பத்தின் கவலை துடைக்க "நிதிக் குழு" வொன்று அமைக்கும் முடிவு இடுகாட்டிலேயே எடுக்கப்பட்டது. அந்தக் குழுவினரிடம் தி. மு. கழகம் ஆயிரம் ரூபாய் அளிப்பதாக நாவலர் நெடுஞ்செழியன் அறிவித்தார், தி. மு. கழகக் கலையுலகத் தோழர்கள் தரும் காணிக்கை இரண்டாயிரத்துக்குங் குறையாமல் தருவதாக தோழர் மு. கருணாநிதி வாக்களித்தார்.

இவ்வண்ணம் தாயகத்து மக்கள் அனைவரின் இதயத்திலும் குடியேறி விட்ட ஏந்தல் ராஜரத்தினம் அவர்களின் புகழ் என்றும் நின்று நிலைபெறுமென்பதில் ஐயமில்லை!...வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அல்லும் பகலும் அவர் குடும்பத்துக்கு ஆவன செய்யும் கடமையுணர்ச்சியின்பால் அனைவரும் ஈர்க்கப்பட்டுப் பணியாற்றுவோமாக!

வாழ்க ராஜரத்தினம்!

தயாராகிறது...

தமிழ் விருந்து!

மலர் முழுவதும் வண்ணப் படங்கள்! அழகிய முகப்பு!

சென்ற ஆண்டினைப் போலவே செங்கரும்பின் சுவை-செந்தமிழ்த் தேனருவி!

முரசொலி பொங்கல் மலர்

விலை ரூபாய் இரண்டுதான்!

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்

★ விழுந்தது நட்சத்திரம்! ★

மறைந்தது மாடத்து மணி விளக்கு! விழுந்தது எப்போதோ ஒரு முறை தோன்றும் வால் நட்சத்திரம்! ஆம்: தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே பிறவி எடுத்த பெருந் தலைவர் அம்பேத்கார் நம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டார்!

அவர் பேச்சிலே புயல் பெரு நடை போடும்: எரிமலை கக்கும் அனற் குழம்பு வெல்லுஞ் சொல் இல்லாத வார்த்தைகளைப் பொழிந்து தள்ளும்!

வீணர்கள் விழி பிதுங்குவர் அவருதிர்க்கும் வீரமொழி கேட்டு!

போதி மரத்துப் புத்தன் பறப்பட்டு வந்து விட்டானோ; நம்மை ஆதிமுதற்கொண்டு அழித்தொழிக்கப் போகிறானோ; என்று ஜாதி வெறியர்கள் பாறையிலே மோதிய தென்னங் காயினைப்போல தெறித்து விழுந்தனர்; அல்லும் பகலும் அனவரதமும் இருண்டு கிடந்த தீண்டத் தகாதவர்கள் குடில்களிலே ஜோதிக் கதிர்கள் அனுப்பிய அந்த மேதையைக் கண்டு!

அய்யகோ: அந்தத் தடைபடாத் தேனருவி சென்ற கிழமை தடைபட்டு விட்டதாம்! கேடுகளை வதற்காகவே வாழ்ந்த அந்தக் கோடையிடியை இனிக் கேட்க முடியாதாம்! சழக்கர் விரித்திருந்த சாதிக் கடையினை மூடிக் கொள்வதற்கு முன்பே கண்மூடி விட்டார், பொன்னிற்கும் கண்ணிற்கும் மேலான பெருந்தகையாளர்!

இழிதகை கோட்பாடாம் இந்து மதத்தில் தோன்றினார்: ஆனால் சாகும்போதோ ஜெகத்திற்கெல்லாம் புதுச் சேதிசொல்லும் ஆரிய எதிர்ப்பாளனாகச் செத்தார்!

கனவிலும், நனவிலும் ஒதுக்கப் பட்டத் தோழர்களின் உயர்வையே உள்ளினார்! உலகமெல்லாம் காந்தியை சமதர்மத் தூதுவர் என்றுபோற்றி வந்த நேரத்திலே துணிந்து முன் வந்து. அவரை ஒரு சனாதனவாதி — என்று சுட்டிக் காட்டினார்!

ஆமாம்: இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டின் சிந்தையணு ஒவ்வொன்றிலும் குடியேறியிருக்கும் மனு தர்மத்தை மண்ணோடு மண்ணாக்கப் படை திரட்டிப் போர் புரிந்த அந்தப் பெரு வீரன் இறுதிக் காலத்திலே சாவை எதிர்த்துப் போரிட மறந்துவிட்டார்; எதிர்பாராத தருணத்திலே நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்!

அவர் பிரிவால் கருகுகிறது பகுத்தறிவு உலகம்!

அவரது உறவால் உயர்வு பெற்ற ஒதுக்கப்பட்டோர் கோவெனக் கதறுகின்றனர்!

இந்த சோக மயமான நேரத்தில் நாமும், தாழ்த்தப்பட்ட மக்களது ஆவிநிகர் தோழரான அம்பேத்கார் குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தை உரிமையாககுகிறோம்.

'முரசொலி'

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ரோடு சென்னை-6, தமிழ்நாடு.